856

R. No. M. 2445.

உ

சிவமயம்.

13 AUG 1930

வீரசைவம்.

திங்கள் வெளியீடு.

மலர் உ	பிரமோதூத—ஆனி—ஆடி 1930—ஜூன்—ஜூலை	இதழ் கூ—எ

க. கடவுள் வணக்கம்

உ. ஜயதேவ முருகராஜேந்திர மகா சுவாமிகள்

௩. ஸ்ரீபசவேச விஜயம்

௪. வைதிக மதங்கள்

ரு. சக்தி விசிஷ்டாத்வைத மதம்

சா. தீக்ஷையே மோக்ஷ சாதனம்

எ. பாவலர் விருந்து

அ. வீரசைவ சமய மகளிர் கடமை

கூ. திருமுருகாற்றுப்படை

ய. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்

யக. வடநாட்டு நிகழ்ச்சிகள்

யஉ. அட்டாவரணம்

பத்திராசிரியர்: வீ. குமாரவீரையர்,
வீரசைவ நிலையம்,
முசிரி, (திருச்சி ஜில்லா.)

நித்தியானந்த அச்சுக்கூடம், பெரியகடைவீதி. துறையூர்—1930.

நமது சந்தா நேயர்கட்கோர் விண்ணப்பம்.

ஐயன்மீர்,

நமது பத்திரிகை சென்ற ஆண்டில் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் முதல்வாரத்துத் திங்கட்கிழமை தோறும் வெளிவந்து நேயர்களது உள்ளத்தை மகிழ்வித்தது யாருமறிவர். தபால் இலாகா நிபந்தனையும் அதுவே. இவ்வாண்டின் தொடக்கத்தில் இதற்கென ஓர் அச்சுச்சாலை நிறுவலாமென்ற கருத்துடன் அதற்காவனவற்றைக் கவனித்தமையாலும், பின்னர் அதுநிற்க, வேறு அச்சுச்சாலைக்கு மாற்றி அரசாங்கத்தார் கட்டளையை எதிர்பார்க்க நேர்ந்தமையாலும் முதல் மூன்று இதழ்களும் ஒரே புத்தகமாக வெளிவரலாயின. அதனைப் பொறுத்துக்கொண்ட நேயர்கள் பின் நிகழ்பவற்றையும் பொறுத்துக் கொள்வாரென் றெண்ணியே இம்முறையும் ஞாபகப்படுத்தலாயினேம்.

மேமாதம் 5ல் வெளிவர வேண்டிய 5-வது இதழ் வேலைமுடிவு பெற்றிருந்தும் வீரசைவ மகாநாட்டை மேமாத விடுமுறையில் நடத்த வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டு வடநாடு சென்றுவந்தமையால் தபாலில் அனுப்பக் குறித்தநாளில் தடையுற்றது. தபாலிலாக்காத் தலைவர் அனுமதியளிப்பது அரிதானமையில் அதுவும் ஜூன்மாத முதலில் வெளியிட நேர்ந்தது. உத்தியோக நிபந்தனையாலும், வாக்காளரது பிறிதொரு முகத்தானும் உடல்நலக் குறைவாலும் ஜூன்மாத இதழும் வெளிவராது நிற்க 6, 7-வது இதழ்களிரண்டும் ஒரே புத்தகமாக இப்பொழுது வெளிவருகின்றன. இக்காரணங்களால் தடையுற்று நின்றமைக்கு மன்னித்துப் பாராட்டுவீர்களெனக் கருதி மீண்டும் ஞாபகப்படுத்தலாயினேம்.

இனி மாதந்தோறும் குறித்த காலத்தில் வெளியிடுதற்கான முயற்சியில் இருக்கின்றோம் ஆதலின் நேயர்கள் தங்கள் சந்தாத் தொகையை இத்திங்களிலேயே மணியார்டர் மூலமாக அனுப்புதல் வேண்டும். அல்லது V. P. P.ல் அனுப்பலாவது அனுமதி கொடுத்தல் வேண்டும். எவ்வகையிலாயினும் பதில் அளிக்காதவர் பெற்றுக் கொள்வதற்கு உடன்பட்டவர் எனக் கருதி **V. P. P.** அனுப்புவோம் பெற்றுக்கொண்டு ஆதரிப்பாராக.

பத்திராசிரியர்.

1? AUG1930

உ

சிவமயம்.

வீரசைவம்.

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்

மகாசங்கத்தினின்றும் வரும்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

க்ற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மலர்	பிரமோதூத—ஆனி, ஆடி.	இதழ்
உ.	1930—ஜூன், ஜூலை.	கூ எ.

(கடவுள் வணக்கம்.)

1. *பஞ்சானந தநுத்பூதாந் பஞ்சாக்ஷர மநூபமாந்*
பஞ்சஸூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாந் ஜகத்குரூந்.

2. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னன்.

3. வெள்ள வேணிப் பெருந்தகைக்கி யாஞ்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய்யடியா ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாகும் வசவேசன் மலர்த்தா டலையால் வணங்குவாம்.

4. பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய ருரைக டமைநீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றேன் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5. மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

ஸ்ரீமதநாதி பரமபரசிவ பரஞ்சோதிப்பிரபு பரம்பராகத ஸ்ரீமகாப்பிரபு
கரகமல ஜாதஜாத, கலியுகபாவன கர்த்துரு
100-வது ஸ்ரீமத் அல்லமாப்பிரபு சூன்யபீடாதீச ஜகத்குரு
சன்னபசவப்பிரபு பதாரூட சூன்யசிம்மாசனகர்த்தர்
ஸ்ரீமத்சின்மூலாத்திரி பிரஹன்மட ஸ்ரீமன்மகாராஜ நிரஞ்சனஜகத்குரு

ஜயதேவமுருகராஜேந்திரமகாசுவாமிகள்.

ஸ்ரீமத். சங்காரூபம் தீமந்தம் திக்தடாந்வித யசோபரிதம்
ஸ்ரீமாந்யம் ஸ்ரீதபாலம் ஸ்ரீமுருகேந்திரம் விராஜமானம் சததம்.

கடல் புடைசூழ்ந்த இப்பரந்த உலகத்தின்கண் வீரசைவ உலகத்தை தெய்வமணங் கமழுமாறு விளக்கமுறச் செய்கின்ற இப் பேரொளியானது கதக்நாட்டிற்கு அணிமைத்தாய நைஜாம் கொப்பள ஜக்கீரியைச்சார்ந்த பின்னளு என்னும் நகரத்தின்கண் உதயமாயிற்று. அங்குள்ள ஹிரேமடம் வேதமூர்த்தி பசவலிங்கய்யர் அவர்களது கற்புடை மனைவியார் பௌராம்பை அவர்களது கருப்பையாகிய தூய்மைக்கடல் வீரசைவ உலகத்தைப் பேதமையாகிய பேரிருளினின் றும் நீக்கி விளக்கமுறச் செய்தற்காக இத்தண்மதியின் உதயத்திற்கு இடந்தந்தது. அஞ்ஞானக் கடலில் மூழ்கும் ஆன்மாக்களைக் கரை யேற்றும்பொருட்டுப் பிரமதாதி கணங்களை இவ்வுலகத்தில் தோன்றச் செய்யும் பரமசிவன்—தம்பால் பிறக்கும் குமாரனை உலக நன்மையின்

பொருட்டுத் துறவற நிலையை மேற்கொள்பவனாகச் செய்யவேண்டும் எனத் தவங்கிடந்த இந்த நாயகன் நாயகிகளுடைய விருப்பத்தை நிறைவேற்று முகமாக இந்த அவதாரத்திற்கு ஆணை தந்தானென்றே தோன்றுகிறது. களங்கமற்ற முழுமதியனைய பேரழகு உடையதாகி அஞ்ஞான அசுரகுல காலவீரனெனப் பொலிவுற விளங்கிய இக்குழந்தைக்கு சென்னவீரதேவர் என்னும் பிள்ளைத் திருநாமம் இடப்பெற்று அத்திருநாமம் பொருட் பொருத்த முடையதாயிற்று.

குழந்தைக்கு ஐந்தாண்டு நிரம்பியதும் தாய் தந்தையர்கள் முன்னர் வரங்கிடந்தபடியே அக்குழந்தையை டம்பளம் ஸ்ரீதோண்டாராத்திய மகாசுவாமிகளிடம் சேர்ப்பித்தார்கள்.

சென்ன வீரமரிதேவருக்கு உலகியல் சம்பந்தமான கல்விப் பயிற்சி அரகேரே என்னுமிடத்தில் நடைபெற்றது. சமஸ்கிருத வைதிகக் கல்விப்பயிற்சி ஸ்ரீஅளவண்டி சித்தப்பய்யர் அவர்களிடம் தொடங்கப்பெற்று, மூடலகெரெயில் ஸ்ரீகந்தகல் பருவ்த சாஸ்திரிகளிடம் புராண காவியங்களின் பயிற்சி நடைபெற்றது. அதன்மேல் டம்பளமடம் ஸ்ரீசுவாமிகள் இந்தமரிதேவருடைய கல்விப்பயிற்சி தம்பாலே நடைபெற வேண்டுமென எண்ணி ஸ்ரீகரவீரப்ப சாஸ்திரிகளைக்கொண்டு பயிற்றுவித்தனர். பின்னர் காசியில் பயின்றுவந்த ஸ்ரீபண்டித நீலகண்ட சாஸ்திரிகளுடைய தலைமையில் நடைபெற்ற கதக் சமஸ்கிருத பாடசாலையில் மரிதேவருடைய கல்விப்பயிற்சி இரண்டு மூன்று வருடங்கள் நடைபெற்றது. இக்காலத்தில் அவரை கதக் மான்வி ஸ்ரீதண்டப்பா அவர்கள் மனைவியின் தாய்க்குத் தாயாகிய ருத்திரம்மா என்பவர் மிகவிருப்பத்துடன் பாதுகாத்துவந்தனர். சென்னவீரதேவர் தம்முடைய முடிவான படிப்பைக் காசியில் முடிவு பெறச்செய்ய வேண்டுமென எண்ணித் துணிந்ததும் இப்பாடசாலையின்கண் தான்.

கதக்கிலுள்ள பக்தர்களால் உதவி பெற்று ஸ்ரீசென்ன வீரதேவர் காசி நகரத்திற்குச் சென்று, அங்குள்ள ஸ்ரீஜகத்குரு விசுவாராத்திய பீடாதீசரும் வித்யாபிமானரும் மாணவர்களின் நன்மையைக் கருதிய சிந்தனையை யுடையவரும் குருபுங்கவருமாகிய ஸ்ரீஇராஜேஸ்வர மகா சுவாமிகளுடைய பாதுகாப்பில் உணவு முதலியவற்

திற்குத்தக்க ஏற்பாட்டைச் செய்துகொண்டு தம்முடைய அறிவின் திறத்தால் மகாசுவாமிகளுடைய கருணைக்கும் பாடசாலை பண்டிதர்களுடைய விருப்பத்திற்கும் பாத்திரராகி நூற்பயிற்சி செய்துவந்தனர். இடையில் ஒருமுறை கதக்கிற்குவந்து காசிக்குச் செல்லுங் காலத்தில் சோலாப்பூர் ராவ்சாகேப் மல்லப்பா பசவப்பா என்னும் செல்வவான்களைக் கண்டனர். அங்கிருந்த அப்பா சாகேபரும் இவருடைய கல்விப்பயிற்சிக்குப் பொருளுபகாரம் செய்வதாக வாக்கு அளித்தனர்.

காசியில் பயிற்சி நடைபெற்றது. தருக்க முதலிய நூல்களில் உத்தம தேர்ச்சி பெற்றனர்; அதனால் ஸ்ரீஜயதேவ சாஸ்திரிகள் என்னும் பெயரைத் தாங்கினர். இவருடைய அறிவின் திறம் எவ்வளவு பெரியதோ, பூருவ புண்ணிய பரிபாகமும் அவ்வளவு பெரியது; ஏனென்றால், காசியில் இருக்கும்பொழுதே ஸ்ரீமந் மகாராஜ ஸ்ரீசாமராஜ உடையார் ஜி. சி. எஸ். ஐ. அவர்கட்கு இரண்டு முறையும், ஆட்சி புரியும் ஸ்ரீகிருஷ்ணராஜ உடையார் பகதூர் அவர்கட்கு ஒருமுறையும் பல மந்திராக்ஷதயை அளிக்கத்தக்க நல்லயோகம் சாஸ்திரிகளுக்கே கிடைத்தது. இவர்கள் பல்கலைகற்றுப் பாண்டித்தியத்தில் தலைசிறந்தவராயும், உலகியலில் சதுரராயும், ஆசாரிய லக்ஷணங்களாகிய எல்லா இலக்கணங்களும் நிரம்பப் பெற்றவராயும் இருந்தபடியால், ஆசாரிய பீடங்களுள் ஒன்றற்கு இவர்களைத் தலைவராக்க வேண்டுமென்ற பெருமகிழ்ச்சி வீரசைவ சமூகப் பெரியார்களிடம் தானாகவே பிறந்திருந்தது. காசி ஜகத்குரு சுவாமிகளும் இவர்களுடைய அறிவு முதலிய வன்மையைக் கண்டு தமக்குப் பிறகு ஸ்ரீகாசி பீடத்திற்கு இவரையே தலைவராக்க வேண்டுமெனப் பேராவல் உள்ளவர்களா யிருந்தார்கள். ஸ்ரீமந்த சிரசிங்கி தேசாயி அவர்களும், வாரத அப்பா சாஹேபரும் ஸ்ரீஅரம்பாபுரி பீடத்திற்கு இவர்களைத் தலைவராக்க வேண்டுமென்ற விருப்பத்தை வெளியிட்டார்கள்; ஆனால் கடவுளது திருவருள் வேறாயிருந்தது. அப்பொழுது ஸ்ரீமந் மகாராஜ நிரஞ்சன ஜகத்குரு முருகராஜேந்திர மகாசுவாமி பீடாதீசராய ஸ்ரீமுப்பினேந்திர மகாசுவாமிகள் சிவயோக சாம்பிராஜ்யத்தை அடைந்தார்கள். இந்தப் பீடத்திற்கு ஏற்ற திறமையுடையவரும் பேரறிவாளரும் பண்டிதருமாகிய ஒரு தக்காரை ஆராய்ந்தெடுக்கும் பொறுப்புடையார் சமூகத்தாரின் கருத்தை

ஆராய்ந்தனர். முடிவில் பலருள்ளும் ஸ்ரீஜயதேவ சாஸ்திரிகளுக்கே பல பெரியாரின் நன்மதிப்பு ஒப்பம் கிடைத்தது. ஆதலால் ஸ்ரீசூன்ய சிம்மாதனத்தை இற்றைக்குச் சுமார் 25 வருடங்கட்கு முன்னர் ஆரோகணஞ்செய்து அணிபெறச் செய்தார்கள்.

ஸ்ரீமந் மகாராஜ நிரஞ்சன ஜகத்குரு ஜயதேவ முருகராஜேந்திர மகாசுவாமிகளுடைய சமஸ்தானம் 25 வருடங்கட்கு முன்னர் அவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்திருக்கவில்லை. மகாசுவாமிகள் பீடாதிபதியாகியது வீணுக வீற்றிருப்பதற்கன்று. கல்வியாளரும் பேரறிவாளரும் ஆயினமையால் தாம் ஆரோகணஞ் செய்துகொண்டிருக்கும் சிம்மாசனத்தின் பொறுப்பு எவ்வளவு மாட்சியுற்றதென்பதை நன்கறிந்தவராகி முதலில் சமஸ்தானத்தின் ஆட்சிக்குரிய விசாரணைகளைச் சிறிது ஒழுங்குபடுத்திக்கொண்டார்கள். அதன்மேல் பீடாதிகாரிகள் வீணுகப் பெரிய மடங்களில் உட்கார்ந்துகொண்டு பக்தர்களாலும் மற்றவகையாலும் வரும் பொருள்களைப் பரிவார சகிதமாக உண்டு ஒழிப்பது அனுசிதமும் அநியாயமுமான காரியம் என்னும் உண்மையை நன்குணர்ந்தவர்களாகையினுலே, பக்தர்களாகிய ஆன்மாக்களை நன்னிலைக்குக் கொண்டுவரும் பெருநோக்கங்கொண்டு பற்பல விடங்கட்குச் சஞ்சாரஞ் செய்யவேண்டி முறைபாக மைசூர், பம்பாய், சென்னை, நைஜாம் முதலிய இராஜ்யங்களிலும், கொல்காபூர், சாங்கிலி ஔந்து, ஜத், டபலாபூர், சவணூர் முதலிய ஸ்டேட்டுகளிலும் சஞ்சாரஞ் செய்தார்கள். இந்த சஞ்சாரத்தில் மகாசுவாமிகளுக்கு ஒரு பெரிய இடையூறு நேர்ந்தது. அக்காலத்திற்கு ஜகத்குரு முருகே மடத்தவராவது ஏனைய வீரசைவ பீடாதிபதிகளாவது தத்தம் பிருதுகள் சகிதம் சஞ்சாரஞ்செய்து எவ்வளவோ நாட்களாயின. இந்த சஞ்சாரம் புதிதாகத் தோன்றியது. இதனுல் வீரசைவ பீடாதிபதிகளுக்கு அட்டபாலிகா (குறுக்குச் சிவிகை) பஞ்சகலசம் முதலிய பெரிய பெரிய பிருதுகள் உண்டென்பதே அன்னிய மதத்தினர்க்குத் தெரியாதிருந்தது. ஒருவேளை தெரிந்திருந்தாலும் அதனை மறைத்து பல முயற்சியினுல் அத்தகைய பிருதுகளுக்குத் தடையை யுண்டாக்கிக் கொடுமை செய்ய வேண்டுமென்ற தீய வெண்ணம் அவர்கட்கு உண்டாவது இயற்கை அன்றென்று கூறலாகாது. மகாசுவாமிகளுடைய சவாரி எவ்விடத்திற்குச் சென்றுலும் பெரும்பாலும் ஆங்காங்கு இது சம

பந்தமான வழக்குகள் வந்துநேர்ந்தன. இவைகளின் பரிகாரம் இப்பொழுது அவ்வளவு கஷ்டமாகத் தோன்ருவிடினும் அப்பொழுது வீரசைவ சமாஜத்தில் கல்விக்குறைவு தாண்டவமாடிற்று. சர்க்கார் உத்தியோகத்தில் வீரசைவர்களுடைய செல்வாக்கு இல்லாத காலத்தில் உண்மையான தங்கள் பாத்தியதைகளையும் மெய்ப்பித்துக்கொள்வது பெருங்கஷ்டமாக இருந்தது. மேலும் ஜகத்குரு மகாசுவாமிகள் அங்குநேர்ந்த இடையூறுகளுள் எதற்கென்றுதான் பரிகாரந் தேடுவார்கள்! அங்கு அன்னிய மதத்தினர் இவர்களுடைய திருவுலா உற்சவம் இன்னின்ன பிருதுகளுடன் நடைபெறக் கூடாதென்றும், தங்கள் மடத்திற்குமுன் பல்லக்கில் எழுந்தருளி வருவது தங்கட்கு அவமானத்தைத் தருவதென்றும் குறிப்பிட்ட இடத்தில் வாத்தியங்களை நிறுத்த வேண்டுமென்றும் வழக்குகள் தொடுத்தனர். வேறு காரணமின்றேல் இவர்களுடைய உற்சவம் இவ்வூரில் நடைபெறுவதால் பொது ஜனங்கட்கு அசமாதாரணமென்றும், கலகமுண்டாகும் என்றும் கையொப்பம் வாங்கி சர்க்காருக்கு அனுப்பினர். குரங்கின்கண் பிரமாண்டம் என்ருற்போல் இவையே பெரியதோர் காரணமாக உற்சவத்திற்குத் தடையுத்திரவு பிறந்தது. அவ்விதவூரினின்றும் வேறு நகரத்திற்குப் போவதென்ருல் தம் மதிப்பிற்குக் குறைவு வருவதொரு புறமிருக்க, பீடத்திற்கும் சமாஜத்திற்கும் குறைவு நேருவதாயிருந்தது. இங்ஙிலையில் மகாசுவாமிகள் வன்மையுடையவராயிருந்தமையின் யாதொரு தடையின் முளையை எங்கெந்த இடத்தில் தோன்றிற்ரோ அந்தந்த இடத்தில் இருந்தே வேரோடு களைந்துவிட்டு சர்க்காரது தக்க ஆதரவைப்பெற்று ஆங்காங்கு உற்சவத்தைச் சிறப்பாய் நடத்திக்கொண்டு வெற்றியுடன் மற்ற இடங்கட்குச் சென்ருர்கள். ஆங்காங்கு நடந்த இடையூறுகள் இத்துணையென்று சொல்வதோ அரிது. உதாரணமாக இரண்டொன்று எடுத்துக் காட்டுவோம். அவற்ருல் இந்த மகாசுவாமிகளால் இந்த ஜகத்குரு சிம்மாசனத்திற்கும், மற்ற சிம்மாசனங்கட்கும் எவ்வளவு உபகாரம் நேர்ந்துள்ளதென்பது வெளியாகும். துமகூர்தாலூகா தொட்டகுணி என்னுங் கிராமத்தில் மகாசுவாமிகளுடைய திரு வுலாவின் நிகழ்ச்சிமுறை முன்னரே ஏற்பட, மேற்கண்ட காரணங்களினல் 'தொட்டகுணியில்' பிரவேசிக்கக் கூடாதென வீரசைவர்கட்கு அன்னிய மதத்தினர் தடையுத்திரவு பிறப்பித்தது மைசூர் கர்நாடகத்தி

லுள்ள ஒவ்வொரு வீரசைவருக்குந் தெரியாததொன்றன்று. இந்த குறைந்த மனைகளுள்ள சிறு கிராமத்தில் மகாசுவாமிகளுடைய சவாரி பரிவாரங்களுடன் சிலமாதம் வரைநின்று தக்கவழக்குகளை தொடுத்து முடிவில் அனுகூலமான சர்க்கார் உத்தரவைப்பெற்று அதிசயிக்கத் தக்க கீர்த்தியை நிறுவி மேலே செல்லுவதாயிற்று. இங்கு தொட்ட குணியில் இத்தகைய வெற்றியை நிலைநாட்டாதிருந்தால் எவ்வளவோ குறைகள் நேர்ந்திருக்கும்.

பம்பாய் கர்நாடகத்தில் பாகலகோடி முகாமில் மகா சமஸ்தான உற்சவத்திற்கு பிராமணர்கள் கொடுத்த தடைகள் அனைத்தும் முடிவில் தீர்ந்தொழிய அட்டகாசத்துடன் பல்லக்கு உற்சவம் நடந்தேறிய விஷயம் வீரசைவ உலகம் தெரிந்ததொன்றல்லவா? இஃதன்றியும், அதிணி ஸ்ரீசிவயோகீஸ்வரர் உற்சவத்திலும் நந்தித்துவஜத்திற்கு வியாசன் தோளைக்கட்டும் உற்சவம் செய்யக் கூடாதென்று பிராமணர்கள் தொடுத்த வழக்கு பம்பாய் சீப்-கோர்ட்டு வரைக்கும் நடந்து வீரசைவரது பக்கமாகவே தீர்மானமாகி மகாசுவாமிகளினுடைய உற்சவம் வியாசன் தோள்கட்டிய நந்தித் துவஜத்துடன் நடைபெற்றது. இங்ஙனம் அநேக இடங்களில் நேர்ந்த தடைகளை பிறரால் தாங்கமுடியாத பெருமுயற்சியுடன் தக்க சான்றுகளைக்காட்டி அந்தந்த சர்க்காருடைய உத்தரவைப்பெற்று வீரசைவ சமயத்திற்குப் புகழை நாட்டினார்கள். இதனால் இந்த சமஸ்தானத்திற்குக் கீர்த்தியுண்டாயினதேயன்றி மற்ற வீரசைவமத ஜகத்குருக்களுடைய சமஸ்தானத்திற்கும் வேண்டிய பலங்கள் சுலபமாகவே கிடைத்தன. வீரசைவ சமாஜத்திற்கே எப்பொழுதும் அழியாத பேருபகாரமாயிற்று.

மகாசுவாமிகள் தேச சஞ்சாரமாகப் புறப்படுவதன் முக்கிய நோக்கம் உற்சவங்கள் ஆகின்ற இடங்களில் நேருகின்ற வழக்குகளுக்குப் பரிகாரங்கண்டு வெற்றி பெறுவதற்கன்று! பக்த கோடிகளின் முன்னேற்றமே இதன் முக்கிய நோக்கம். ஒவ்வொரு இடத்திலும் மகாசுவாமிகள் சமஸ்தான ஆஸ்தான பண்டிதராலும், ஏனைய அறிவுடையாராலும் உபந்நியாசங்களைச் செய்விப்பார்கள்; தாமாகவும் உபதேசம் புரிவார்கள். இதன் மூலமாக மக்கள் அறிவு வளர்ச்சியடைந்து 'வீரசைவம்' என்றால் இன்னதென்பதை உணர்ந்து கொள்ளும் சக்தியுடையராகின்றனர்.

மகாசுவாமிகள் சமாஜத்திற்கு மற்றொரு பேருபகாரத்தைச் செய்திருக்கின்றார்கள். அஃதென்னை யெனில்;—மகா சமஸ்தானத்தின் ஆட்சிக்குட்பட்ட வெவ்வேறு மடங்களில் குருத்துவஸ்தானங்கள் காலியாயிருக்கும் பொழுதெல்லாம் அம்மடங்கட்குத் தக்க மரிஸ்வாமிகளை ஆராய்ந் தெடுத்து நியமிக்கத்தொடங்கினார்கள். அன்றியும் பிரதி யொவ்வொருவரையும் ஒவ்வொரு மடத்திற்குப் பழக்கமான (நிரந்தரமான) குருக்களாக நியமிக்காமல் ஒவ்வொருவரையும் ஒரு மடத்திலிருந்து மற்றொரு மடத்திற்கு மாற்றுகிற பத்ததியை இயல்பாக ஏற்படுத்தினார்கள். இதனால், மடாதிபதிகளுக்கே 'தான்' 'தன்னுடையது' என்ற துரபிமானம அற்றுத் தாம் சமாஜத்திற்காக வேலைசெய்ய வேண்டியவர் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டதன்றியும், எங்கெந்த மடங்கள் குறைவுபாடுற்றிருக்கின்றனவோ அந்தந்த மடங்களுக்கே மிகவுஞ் சக்திவாய்ந்த மடாதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைப்பதனால் குறைந்த நிலைமையிலிருந்த அநேக மடங்கள் மேலான நிலைமைக்கு வந்தன. இதற்கு இரண்டொரு உதாரணங்கள் ஈண்டு காட்டப்படுகின்றன; முதலில் தாவணகரை விரக்த மடத்தின் அதிகாரத்திலிருந்த ஸ்ரீமந் நிரஞ்சனவர்ய் மிருத்தியஞ்சய சுவாமிகள் தாருவாடாவின் ஸ்ரீமுருக மடத்திற்கு மாற்றப் பட்டதன்மேல் அவர்கள் அங்கு பாடசாலை, போர்டிங்குகளை ஏற்படுத்தி நடத்தியிருப்பது எல்லோரும் அறிந்த விஷயமே. நைஜாம் ராஜ்யத்தின் குருமடமாகிய கல் மடத்திற்கு ஹிரேபாக வாடி ஹிரே மடத்தின் பட்டாதிகார மரிஸ்வாமிகளாக மகாசமஸ்தானத்தின் ஆதரவினால் மைசூரில் அத்தியயனம் செய்து கொண்டிருந்த ஸ்ரீசென்ன பசவமரிகளை ஸ்ரீசாந்தவீரசாமிகள் என்னும் நாமங்கொடுத்து நியமித்தார்கள். இவர்கள் இந்த மடத்தை எவ்வளவோ வளர்ச்சிக்குக் கொண்டு வந்திருப்பதன்றியும் நைஜாம் வீரசைவ சபைகளைக் கூட்டிவைத்தல் முதலானவற்றின் மூலமாக மக்களுக்கு உணர்ச்சியை உண்டாக்கி வைத்தார்கள்.

ஜகத்குரு மகாசுவாமிகளால் சமாஜத்திற்குண்டான மற்றொரு உபகாரம் என்னை யென்றால், தமது கையில் சமாஜ காரியங்களுக்குச் சகாயஞ்செய்ததேயன்றி தக்கவரான சமாஜ அபிமானிகளை ஊக்கித்து அவர்களால் சமாஜத்திற்கு உபகாரஞ் செயவித்தார்கள் என்பது.

திபடூர் வீரசைவாச்சிரமத்திற்கு மகாசுவாமிகள் தக்கவாறு சகாயஞ் செய்து, திபடூரின் கை. ஜி. கொட்டூரேப்பா அவர்களை ஊக்கப்படுத்தி சுமார் இருபத்தையாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பொருளைக் கொடுப்பித்தார்கள். தருமவீரசங்கரண்ணனவர்களின் 1 லக்ஷரூபாய் பெறுமானமுள்ள மூல தனத்திற்கும் ஸ்ரீ ஜகத்குருவே காரணமாவர். மகாசுவாமிகளுடைய பெங்களூர் முகாமில் மேற்கண்ட குருமடம் கல்லின சுவாமிகளால் ஞாபகப்படுத்தப் பெற்றவரான நஞ்சன் செட்டி சங்கரண்ணனவர்கள் குடும்பத்துடன் தரிசனத்திற்காகவர, ஜகத்குரு மகாசுவாமிகள் அவர்களை உற்சாகப்படுத்தி, பெங்களூர் கை. தோடதப்பா முதலான கொடையாளிகளின் வள்ளற்றன்மையை எடுத்துச் சொல்லி, அங்கு சமஸ்கிருத வித்தியாப்பியாசத்திற்காக இரண்டுலக்ஷ ரூபாயைக் கொடுக்கும்படிச் செய்தார்கள். இப்படிப் பட்ட பல உபகாரங்களைச் சொல்ல விரியப்பெறுவனவாம்.

சமாஜ முன்னேற்றத்தைச் செய்விப்பதே குருபீடங்களின் முக்கியமான செயலென்பதையும், சமாஜ முன்னேற்றத்திற்கு வித்தியாப்பியாசமே முக்கிய காரணம் என்பதையும் செய்துகாட்டிய ஜகத்குரு சுவாமிகளே வீரசைவ சமாஜத்தில் இதுவரை வித்தியாப் பிரசாரஞ் செய்வித்தவர்களில் தலைமை பெற்றவராகச் சிறந்து விளங்குகின்றார்கள். சமஸ்தானத்திலிருந்து பாதகண்டத்தின் வெவ்வேறு இடங்களில் அநேக மாணவர்களுக்கு அவரவரது தகுதிக்கேற்ப சம்பளத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். மகாசமஸ்தானத்தின் பொருட் சகாயத்தால் கல்வி பயின்ற அநேக வீரசைவ மாணவர்கள் இப்பொழுது பற்பலவிடங்களில் பெரியதும் சிறியதுமான சர்க்கார் உத்தியோகங்களிலும், வக்கீல் பயிற்சியிலும், மற்றச் சுதந்திரத் தொழில்களிலும் இருந்துவருகின்றார்கள். இஃதன்றியும் மகம்மதியர், ஒக்கலியர் முதலான அன்னியமத மாணவர்களுக்கும் மகாசுவாமிகளால் ‘ஸ்காலர்ஷிப்’ கொடுக்கப் பெறுவதும் வெளிப்படையாகின்றது. மகாசுவாமிகள் சஞ்சாரஞ் செய்யுங்காலத்தில் பெரிய பெரிய நகரங்களில் ஒவ்வொரு மாணவர் விடுதி கட்டும்படி முயற்சிப்பதும், சமஸ்தானத்தின் பொருட் சகாயத்தால் ஆங்காங்கு மாணவர் விடுதி கட்டி வைப்பதும் தமது கடமையாகக் கொண்டவர்கள் என்பதற்கு இப்பொழுது மகாசுவாமிகளுடைய பெயரால் ஆங்காங்கு நடைபெற்று

வரும் மாணவர் விடுதிகளே சான்றாகும். இதனால் கல்விப்பயிற்சியில் மாணவர் முன்னேற்ற மடைவதற்குச் சாதனங்கள் ஏற்பட்டன.

உலகத்தின் மத்தியில் வீரசைவ மதசம்பந்தமான பற்பல மடங்கள் ஈனஸ்திதியிலும், சில மடங்கள் ,தலைவரில்லாமலும் இருந்தன. இப்பொழுதும் அந்த நிலையில் சில மடங்கள் இருக்கின்றன. இதன்மேல் அநேக மடங்களை மகாசுவாமியவர்கள் தமது வசத்தில் எற்றுக்கொண்டு அவைகட்குத் தக்க அதிகாரிகளைச் சமஸ்தானத்திலிருந்து அனுப்பிவந்தார்கள். இச்சமயத்தில் சில மடங்கள் சம்பந்தமாக சர்க்காரிலும் இதரருடனும் பலவிதமான விவகாரங்கள் நடத்த வேண்டியதாயிற்று. உதாரணத்திற்கு குடகு மாதாபுரம் மடத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மடத்தினதும் அது சம்பந்தமானதுமான பெரிய ஜமீன்களுடைய பாத்தியதைகளைக் கைப்பற்ற வேண்டியதற்காக சமஸ்தானத்திற்குப் பல தொந்தரவுகள் நேர்ந்தன.

மகாசுவாமிகளுடைய ஆட்சிக் காலத்தில் கட்டடங்கள் கட்டப்பெற்றன. சித்திரதுர்க்கம் பிரஹன் மடத்தின் மகாத்துவாரம், சுற்று மண்டபம், சாஸ்திர மண்டபம், விசாரணை மண்டபம், கொலுமண்டபம் முதலியனவும்; கொல்லாபுரம் (கரவீரக்ஷேத்திரம்) இராஜதானியில் இருக்கும் சொந்த மடங்கள் மகாசுவாமிகளுடைய காலத்திலேயே கட்டப்பெற்றன. இப்பொழுதும் அநேக கட்டடங்கள் தயாராய்க்கொண்டிருக்கின்றன.

மகாசுவாமிகள் சமூகம் அல்லது நாட்டின் நன்மைக்குச் சம்பந்தமான காரியங்களனைத்திற்கும் கைகொடுத்துச் சமாஜத்தின் மேன்மைக்கே உரியராயிருக்கின்றார்கள். பற்பல இடங்கட்குச் சென்று அங்குள்ளார் வேண்டியவாறு பல அறநிலையங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். மகாயுத்த காலத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு ஊக்கமுண்டாகுமாறு ஆசீர்வாத ரூபமான தந்தி கொடுத்ததன்றி வீரசைவ மதத்தினராகிய பக்த கோடிகட்கெலாம் நமது சக்கிரவர்த்தி அவர்கட்கு வெற்றியுண்டாதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்படி ஆணை தந்தார்கள். செய்வித்தார்கள். கவர்ன்மெண்டாரும் யுத்த

முடிவில் வந்தன பூர்வகமான வெற்றி மகிழ்ச்சியை மகாசுவாமிகட்குத் தெரிவித்துக்கொண்டார்கள். வெற்றியின் சம்பந்தமாக பற்பல விடங்களில் உற்சவம் நடப்பித்தார்கள்.

மகாயுத்த சமயத்தில் கொல்லாபுரம் ஸ்ரீசாகு சத்திரபதி மகா ராஜா சிரஞ்சீவிகள் இங்கிலாண்டிலிருந்துவந்து பெங்களூர் வழியாகச் சுதேசத்திற்குச் செல்லும்பொழுது முக்கியமான ரயில்வே நிலையங் களிலெல்லாம் வரவேற்பு செய்யுமாறு வீரசைவச் செல்வவான்களுக் கெல்லாம் உத்தரவளித்துப் பாராட்டும்படிச் செய்வித்தார்கள். மகா சந்நிதானம் பெங்களூரில் முகாஞ் செய்யும்பொழுது ஸ்ரீஜயசாமராஜ உடையாரவர்கள் பிறந்தநாள் கொண்டாட்ட தினத்தன்று சமஸ்தா னத்திலிருந்து அம்பாரியுற்சவத்தை நடத்தி மக்கட்கு மகிழ்ச்சியை யுண்டாக்கிவைத்த வைபவம் யாவருக்கும் ஞாபகமிருக்கலாம். மைசூர் ஸ்ரீமான் மகாராஜா ஸ்ரீகிருஷ்ண ராஜேந்திரஉடையார் பஹதூர் அவர் களது வெள்ளித்திருவிழாத் திருநாளில் மகா சமஸ்தானத்திலிருந்து திருமுகத்துடன் மந்திராக்ஷதை அனுப்பிவைத்து ஆசீர்வதித்தார்கள். இந்த உற்சவத்தை பம்பாய் முதலிய பலவிடங்களில் நடத்தும்படியா கவும் வீரசைவர்கட்கு ஊக்கமூட்டினார்கள். மேற்கண்டபடி வைதீக காரியங்களில் எப்படியோ அப்படியே லௌகீக காரியங்களிலும், சிறிய செயல்கள் எப்படியோ அப்படியே சர்வஜன மகத்தான காரியங் களிலும் முன்னெச்சரிக்கையாகக் காலத்திற் கேற்றவாறு செய்ய வேண்டிய செயல்களைச்செய்து முடிக்குந் திறமையால் மகாசுவாமிகள் வீரசைவரும் ஏனையோருமாகிய மக்கட் பரப்பினுள் தலை சிறந்து விளங்குகின்றார்கள். ஆதலினால் பற்பல பெரியார் சந்நிதானத்தைக் கொண்டாடுகின்றனர். கொல்லாபுரம் ஸ்ரீசாகு சத்திரபதி மகாராஜா சர்க்காரார் மகாசுவாமிகளுடைய உற்சவத்திற்கு முழுப் பெருமை யைக் கொடுத்திருக்கின்றார்கள்.

மகா சந்நிதானத்திலிருந்து கல்வி அபிவிர்த்தி சம்பந்தமாகச் செய்துள்ள பொருட்சகாயம் பலவாயினும் சிலவற்றை இங்குக் குறிப் பிடுகின்றோம். இவையன்றியும் பல மகமதியர், ரட்டியார், லம்பாணி, பஞ்சமர் முதலாயினர் வளர்ச்சிக்கும் வருடந்தோறும் பொருளுதவி செய்துவருகின்றார்கள்.

	ரூ.
தாரவாடா ஸ்ரீமுருகாராஜேந்திர ஹாலுக்கு	10,000
பாலகோடி வீரசைவ போர்டிங்குக்கு	1,000
கொல்லாபுரம் வீரசைவ போர்டிங்குக்கு	1.000
கொல்லாபுரம் சைன மராடி மகம்மதீய போர்டிங்குக்கு	800
சதார அஞ்சுமான் இஸ்மாயில் போர்டிங்குக்கு	100
தாரவாடா கர்நாடக காலேஜுக்கு	5,000
சாங்கிலி வீரசைவ போர்டிங்குக்கு	2,000
பிரஹந் மடத்தின் பழய பாடசாலைக் கட்டடத்திற்கு	1,000
சித்திரதுர்க்கம் போர்டிங் கட்டடத்திற்கு	20,000
சித்திரதுர்க்கம் போர்டிங் 40 மாணவர்களின் வருடவேதனம்	4,000
திபடேர் வைதிக பாடசாலை முதலியவற்றிற்கு	20,000
தாரவாடா போர்டிங்குக்கு	2,000
கொல்லாபுரம் வீரசைவ மாணவர்கள் தங்கும் விடுதிக்கு	5,000
சவணூர் அஞ்சுமான் இஸ்மாயில் சங்கத்திற்கு	500
சித்திரதுர்க்கம் ஆர்யன் மாணவர் விடுதிக்கு	200
ஜ்யானேகல் மகம்மதீய பாடசாலைக்கு	500
பெங்களூர் வீரசைவ மாணவர் விடுதிக்கு	30,000
தும்கூர் வீரசைவ ஹாஸ்டலுக்கு	23,500
பியாடிகே போர்டிங்கு புத்தக சாலைக்கு	1,000
தாவணகரை சிவயோகீஸ்வரர் ஆச்சிரமத்திற்கு	10,000

இந்த சமஸ்தானத்தின் பரோபகாரத்தால் வீரசைவர், மற்ற மதத்தினர் முதலானவர்களுடைய சகாயம் வீரசைவ சமாஜத்திற்கும், நாட்டிற்கும் எத்துணையளவு உதவியாகுமென்பதை வீரசைவவுலகம் நினைவு கூரத்தக்கது. சுமார் 25 வருடமாக வடநாட்டாருக்குப் பற்பல வழிகளிலும் பேருதவி புரிந்துவரும் மகாசுவாமிகள் எவ்வகையிலுங் குறைந்த நிலைமையிலிருக்கும் இத்தமிழ் நாட்டிற்கும் எழுந்தருளி இங்குள்ளாரை நன்னிலைக்குக் கொண்டுவர இந்நாட்டு வீரசைவர்கள் வேண்டுவரேல் பேரருள் புரிவார்களென்பது துணிவு. திருவருளும் முன்னின்றுதவுக.

ஸ்ரீபசவேச விஜயம்.

திருவாளர், G. C. வீரப்பா, B, A., L. L. B., வழக்கறிஞர் பெங்களூர்.

பெருந்தகை வள்ளலாராகிய நம் பசவேசர் விச்சலமன்னரை நோக்கி, மன்னர் மன்ன! மக்கட் பரப்பினுள் ஒருவர் மேன்மையுறுவது குணத்தினாலன்றிப் பிறப்பினாலன்றே. குடிப்பிறப்பென்பதும் கல்வி, தவம், ஆள்வினை முதலிய நற்குணங்களால் வருவதேயன்றி இயற்கையில் வருவதன்று. தம்மை யொத்த ஆன்மாக்களிடத்து அன்பும் அருளும் உடைமையன்றோ ஒருவர்க்கு நற்குணம் எனப்படுவது. ஒருவர்க்கு அன்பகத்தில்லா உடம்பு என்பு தோல் போர்த்த சிறு குடிசையல்லவா! அன்பகத்தில்லாத உயிர் வாழ்க்கை வலிய கற்பாறையின்கண் வற்றியமரம் தளிர்த்தது போலாகுமன்றோ! அன்பும் அருளுமில்லாதவருடைய அழகும், ஆண்மையும், குடிப்பிறப்பும் மணமற்ற மலர்போல் பயனற்றன வென்றன்றோ அறிஞரால் இகழ்ந்துரைக்கப்பெறும். பிறப்பு வகையில் உடல் நிலையைக்கண்ட மாத்திரத்தானே ஒருவரை உயர்ந்தோர் என்றாவது, தாழ்ந்தோர் என்றாவது கருதலாகா. உடம்பின் உள்ளிருக்கும் ஆன்ம விளக்கத்தைக் கண்டே ஒருவரை உயர்ந்தோரென்றும், ஆன்ம விளக்கம் இன்மையினால் மாக்களாகிய தாழ்ந்தோரென்றும் அறிவுடையார் போற்றுதலும் தள்ளுதலுஞ் செய்வர். உலகியல் இங்ஙனம் இருப்ப, ஆன்ம விளக்கமுற்ற பெரியாராகிய சிவநாகமய்யரை அவரது பிறப்பு ஒன்றைக்கருதியே இகழ்ந்து தள்ளுதல் அடுக்குமா? அரசர் பெரும! கூர்ந்து நோக்கி, உங்கள்பால் சுயநலத்தைக்கருதி வாதாடும் உத்தியோக வருக்கத்தினர் செயலை ஆராய்ந்து செய்வன செய்க என்று விளக்கிக் காட்டினர்.

இதனைக் கேட்கவே, கோட்சொல்லிகளாகிய அரண்மனை அதிகாரிகட்கோ பசவேசர்பால் எரியும் நெருப்பில் நெய்வார்த்தாற்போல் மேன்மேலுங் கோபமூண்டது; மூளவே எவ்வகையிலாயினும் பசவேசர்க்குக் கெடுதியை விளைவிக்க வேண்டுமென காலங்கருதி சூழ்ச்சி செய்துகொண்டிருந்தனர். ஆனல், பொறாமை பகைவரின்றி கெடுக்க வல்லது என்பதை அவர்களறியார்.

அவர்கள் அங்ஙனம் அழுக்காறு உடையராயினும், நமது அமைச்சர் அவர்கள்பால் வேறுபாடு கருதிலர். ஆயினும் அவர்களது தீய எண்ணத்தை உணராமலும் இருந்திலர். பகைவரின் எண்ணம் அனைத்தையும் நன்கு உணர்ந்தனராயினும் அச்சமும் அசதியுமின்றி அவருக்கு யாதொரு தீங்குஞ்செய்ய நினையாது அறத்தையே கைப்பற்றி நெறி முறையில் ஆட்சி புரிந்துவந்தனர். அவர் எப்பொழுதும் ஒவ்வொரு செயலிலும் அறக்கடவுளுக்கு அஞ்சி நடப்பரேயன்றி மானிடருக்கு அஞ்சியாவது, சுயநலங் கருதியாவது நடப்பவரல்லர். தமக்குத் தீங்கு செய்தவருக்கும் செய்யக் கருதியவருக்கும் நன்மை செய்வரேயன்றி ஒரு சிறிதும் தீங்கு செய்யார். செய்ய நினைக்கவுமாட்டார். காரணமின்றித் தீங்கிழைத்தோர் வீணில் நரகத்திலாழ்வரேயென்று மனம் இரக்கங்கொண்டு அவரை நல்வழிப்படுத்த மீண்டுஞ் சிந்தித்து நிற்பர். இதுவன்றோ உயர்குடிப்பின் தன்மை! இவரை ஒத்தாரது செயலைக் கண்டன்றோ நுண்ணறிவுடைய புலவர் பெருமக்கள்,

"கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத் தேயாகும்
வடுப்ப வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து."

"தம்மை யிகழ்ந்தமைத் தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉம் சான்றோர் கடன்,"

என்று கூறுவாராயினர். இவரது உயர்குணத்திற்கு இரண்டொரு உதாரணத்தை ஈண்டுக் காட்டுவோம்.

ஒருநாள் நமது வள்ளலார் இரவின்கண் தமது படுக்கையறையில் மஞ்சனத்தின்கண் தாமும் தமதன்பிற்குரிய மனைவியாருமாக உறங்கிக்கொண்டிருந்தனர். காலக் கொடுமையால், பேரறிவாளரது போற்றத்தகும் மனப்பான்மை அனைத்தும் அடங்கிக் கொண்டேவரப் பேதமையுடையாரது பிதற்றுதலாகிய வெற்றுரை உலகெங்கும்

பரவிப் பெருக்க முற்றும்போல விளக்கொளி மழுங்க எங்கும் இருள் பரவுவதாயிற்று. அவ்வமயம் களவுநூலில் வல்லாளுகிய கள்வனொரு வன் அவ்வறைக்குட் சென்று அவரது மனைவியார் அணிந்திருந்த ஆபரணத்தைக் கழற்ற முயற்சித்தான். அவன் தன் செய்வினை வலியால் மெல்லெனச் செய்தானுயினும் அறக்கடவுள் தூண்ட அவ் வம்மையார் சிறிது உறக்கந் தெளிந்தனர். அதனையுணர்ந்த கள்வன் அசையாது விலகிப் பின்னர் பேருறக்கஞ் செய்வித்து முற்றுங் கவ ராம் என்னுங் கருத்துடன் ஒருபால் ஒளித்திருந்தனன். அக்கள்வ னது நிலையை உணர்ந்த அம்மையார் அச்சங்கொண்டு தமது காத லரை மெல்லத் தட்டியெழுப்பி நிகழ்ந்ததைத் தெரிவித்தனர். பச வேசரோ காதலியினது அணிகலன்கள் போய்விடுமே யென்றதற்கு அஞ்சாது அந்தோ! இந்நாட்டில் வறுமையின் கொடுமையால் இத் தீய களவினைச் செய்யுங் கருத்துடையவரும் இருக்கிறுர்களா! கள விற்குக் காரணம் வறுமையல்லவா! வறுமைக்குக் காரணம் நாட் டில் கைத்தொழில் இல்லாமையும் விளைவுக் குறைவும், இல்லாமையும் அல்லவா? இவராலன்றே இந்நாட்டின் நிலைமையை உணரலாயி னேம். இவரையொத்த ஏழைப் பெரியார் பலரிருக்க நாமும் நமது மனைவியும் ஆபரணமணிந்து அழகுபடுத்திக் கொள்வது தகுமா! அன் பாகிய அணிகல னில்லாதவரன்றே பொன்னும் மணியாலுமியன்ற பூஷணம் பூணுவது. ஆபரணம் உடல் விளக்கஞ் செய்யுமே யல் லாது ஆன்ம விளக்கஞ் செய்யுமா? ஆன்ம விளக்கஞ் செய்யும் அன்பகத்தில்லாத அறிவிலிகளாகிய பேதைப் பெண்கள் அல்லவா ஆபரணமென்னும் பேயாற் பிடிக்கப்பட்டுத் தம்மைப் பேணும் கண வனைப் பேயாட்டு ஆட்டிவைப்பர். எண்ணிறந்த மக்கள் உண்ண வுணவும் உடுக்க வுடையுமின்றி நிற்கக் கண்டும் ஒப்புரவறியாத மூழ மகனல்லவா தன்னை ஆடை அணியால் அலங்கரித்து மகிழ்வன். கடவுள் கொடுத்த அறிவு நம்மகத்தே நின்றுணர்த்த நாம் ஏழை மக்கட்கு இரங்காதிருத்தல் தகுமா? நங்காய்! நின் ஆபரணமனைத் தையும் களைந்து கொடுவென்று வாங்கிக்கொண்டு தேடிப்பிடித்துக் கள்வரைக்கண்டு அன்பரே! நீரேன் இங்ஙனம் களவொழுக்கத்தைக் கைக்கொண்டீர்? உமக்குத் தேகபலமில்லையா? கடவுள் கொடுத்த உணர்ச்சியில்லையா? அவற்றைக்கொண்டு உமக்கேற்ற கைத்தொழி லொன்றைச் செய்து நீரும் உமது குடும்பத்தாரும் நல்வாழ்வு பெற

லாகாதா? இக்களவொழுக்கத்தால் எப்பொழுதும் இன்பமில்லையே. புக்கவிடத் தச்சம், போதநம்போ தச்சம், துய்க்குமிடத் தச்சம், தோன்றுமற் காக்கும்போ தச்சம், வெளிப்படின் அரசாங்கத்தாரா லும் பிறராலும் பெரிதும் துன்பம் விளையுமே. எக்காலத்தும் அச்ச மும் துன்பமும் விளையக்கூடிய இக்களவினை நீர் மேற்கொள்ளலாமா? ஆனால் நீரென்ன செய்வீர்! நாட்டில் பிழைக்கும் வழியாகிய கைத் தொழிலும், பயிர்த் தொழிலும் பெருகா திருப்பதே இவ்விழிந்த செயலுக்குக் காரணம் போலும். ஆயினும் நீர் இருள் நிறைந்த இர வின்கண் பல தீங்குகட்கு இடமான இக்களவினை இனி கைக்கொள் ளாதீர். உம்மால் இந்நாட்டின் வறுமையை அறிந்துகொண்டதற்கு உமக்கு இந்த ஆபரணங்களனைத்தையும் நன்கொடையாகக் கொடுக் கிறேன். இவற்றைப் பெற்றுக்கொண்டு உமது வறுமைநோயை மாற் றிக்கொள்ளும். இனி வெளிப்படையானதும் சுதந்தரமானதுமான கைத்தொழில் ஒன்றைக் கைக்கொள்ளும்; உமக்கு இறைவன் இன் னருள் புரிவான். நீர் அஞ்சாது செல்க; என்றுகூறி அவர் வீடு செல்லுமளவும் இடையூறு நேராதபடித் தமது சேவகரையும் உட னனுப்பிவைத்தனர். அக்கள்வனும் தான்செய்த தீச்செயலுக்கு நாண முற்றுத் தன்னை மன்னிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு போய் நல்வழியில் நடந்துவந்தான். பிறரையும் நல்வழிப்படுத்தினன்.

•

உணவு முதலியவற்றின் தேவையில் யாரேனும் களவு முதலிய தீச்செயல்களை மேற்கொள்வரேல் அவரை ஒருபொழுதும் தண்டித்த தில்லை. ஒருவர் தீயவழியில் நடப்பரேல் அவரை நற்புத்தி புகட்டி நல்வழியில் திருப்பும் பேராற்றல் நம் பசவேசர்பால் அமைந்திருந் தது, தமது வீட்டிற்கு யாரேனும் வருவரேல் அவரை ஆதரிக்காமல் விடார். அதினும் ஜங்கமர்வரின் சிவபூசை செய்வித்துத் தக்க மரி யாதைசெய்து அனுப்பிவைக்கும் வழக்கம் அவரிடத்தும் மனைவியா ரிடத்தும் இயற்கையில் அமைந்திருந்தது. இவரது குணங்களை யுணர்ந்த கள்வரிற் சிலர் ஜங்கமர் வேடந்தரித்துக் கழுத்தில் துணி யால் பொதிந்த கத்தரிக்காயை இலிங்க தாரணம் போல் கட்டிக் கொண்டு மடாலயத்திற்குள் வந்தனர். அக்கள்வரைக் கள்வரெனக் குறிப்பால் உணர்ந்து கொண்டனராயினும் அறியாதவர் போல் அவர்க்கு அர்க்கிய பாத்தியங் கொடுத்து ஆசனத்தில் அமர்த்தி உப

சரித்து சிவபூசைக்கு எழுந்தருள வேண்டுமென வேண்டிக்கொண்டனர் நம் பசவேசராகிய பெருந்தகையார். உடனே பசவேசரது சிவ பக்தியும் பேரருளும் அக்கள்வர்பால் தாக்கவே அக்கள்வர் சிவபூசை செய்தற்குத் தம்பால் உண்மைச் சிவலிங்கமில்லாமையால் திகைத்து நின்று தமது குற்றத்திற்குத் தாமே நாணி வருந்திநின்று உண்மை கூறி மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டனர். அவருள்ளத்தில் சிவ பக்தி இயற்கையாகவே உண்டாயிற்று. களவு முதலிய தீச்செயலாகிய இருள் அவருள்ளத்தை விட்டகன்றது. அகலவே நம் பசவேசர் அவர்களது பக்குவநிலையை உணர்ந்து கணுதீசர்களைக்கொண்டு இலிங்க தாரணஞ் செய்வித்து நல்வழிப்படுத்தினர். அவர்களும் உண்மை யடியார்களானார்கள்.

இங்ஙனம் நிகழும் காலத்தில் ஓர்நாள் சில திருடர்கள் இரவில் வந்து மடத்தில் சிவபூசைக்கென்று கட்டப்பட்டிருந்த பசுக்களில் நான்கை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். காலையில் களவு வெளியாயிற்று. வேலையாட்களால் அறிந்த அமைச்சர் பெருமான் களவு போன கறவைப் பசுக்களின் இளங்கன்றுகளையும் ஓட்டிச் சென்று கள்வர்களின் அடிச்சுவடுபற்றி அவர்களிருக்கும் இடந்தேடிக் கன்றுகளையும் அப்பசுக்களுடன் சேர்ப்பித்து அக்கள்வர்களாகய ஏழைகளைப் பால்கறந்து உண்ணும்படிச் செய்து வாருங்கள் என்று தம் வேலை ஆட்களுக்கு உத்தரவிட்டனர். அவரது ஆணையை மேற்கொண்ட வேலையாட்களும் கன்றுகளை ஓட்டிச்சென்று நெடுந்தூரத்தில் ஓர் குளக்கரையில் பசுக்களை மேய விட்டுவிட்டுப் படுத்துறங்கும் கள்வர்களைக் கண்டார்கள். அவர்களது வரவையறிந்த கள்வர்களோ திடுக்கிட்டெழுந்து ஓடிமறையச் சென்றார்கள். வேலையாட்கள் ஐயா! நீங்கள் அஞ்சியோட வேண்டா. எங்கள் அமைச்சர் பெருமானார் உங்கள் ஏழமைக்கு இரங்கி இக்கன்றுகளையும் பசுக்களுடன் சேர்த்து உங்களிடங் கொடுத்துப் பால்கறந்துண்டு பசியாறும்படிச் செய்துவர எங்கட்குக் கட்டளையிட்டுள்ளார். இதோ கன்றுகளையும் அங்கீகரியுங்கள் என்று ஒப்புவித்தார்கள். கள்வராயினோரும் அமைச்சரது பெருந் தகைமையைக் கண்டு நாணமுற்று அன்று முதல் களவுத் தொழிலை அறவேயொழித்துக் கண்ணியரானார்கள்.

ஒருவர் நற்கதியடைய வேண்டுமானால் அவர் உலக வாழ்க்கையை வெறுத்துச் சம்சார பந்தத்தைவிடுத்துக் காட்டிற்குச்சென்று கடுந்தவம்புரிய வேண்டுமென்பதில் பசவேசர்க்கு அத்துணை உறுதிப்பாடில்லை. கடவுள் எங்கும் வியாபகர். காட்டில் மாத்திரம் உளர் என்று கூறுவது பொருந்தாது. மனித சஞ்சாரமற்ற விடத்திற் போய் மனதை ஒருநிலையில் நிறுத்துவேன் என்று முயல்வதைவிட நகரத்தில் இல்லறத்தில் இருந்தே நித்திய கருமங்களைச் செவ்வனே முடித்து மனத்தை ஓர்நிலையில் நிறுத்தக் கடவேன் என்று துணிதல் ஆற்றலுடையார்க்கு அரியதொரு காரியமன்று. காட்டில் தவம் புரிபவரெல்லாம் பெரும்பாலும் தன்னலங்கருதியவராக இருப்பர். அன்னார் கடவுளைக் காண்டவிடத்தும் தமக்கு முத்தி யளிக்க வேண்டுமெனவே வேண்டா நிற்பர். பசவேசரிடத்தோ தன் நலமென்பது தலைகாட்ட அஞ்சி ஒட்டமெடுத்தது. அவர் தமக்கென்று யாதொரு செயலுஞ் செய்யார். கடவுளை நோக்கி எக்காலத்திலும் அவர் தமக்கென இது வேண்டுமென வேண்டிக்கொண்டதே இல்லை. ஏழைகளின் இடையே இருந்துகொண்டு அவர்களுடைய நன்மையை நாடுவதே பசவேசருடைய கடமையும் தபசுமாக இருந்தது. பொய்யின்றிப் புரியும் சிவபூசையும் அடியார் நன்மையைக் கருதியதாகவே இருந்தது. நாடும் நாட்டிலுள்ள மக்களும் வறுமையின்றிச் சீருஞ் சிறப்பும்பெற்று வாழ்வடையும் காலமே தாம் முத்தியடையுங் காலமாகவே எண்ணியிருந்தனர்.

இங்ஙனமே இரவும் பகலும் நாட்டிலுள்ள மக்களது சுகத்தை நாடி அதற்கான முறையில் முயன்றுவந்தனர். அதனால் யாவரும் பசவேசர்பால் பேரன்புகொண்டு மரியாதை செய்துவந்தனர். அதனால் அவரது புகழ் உலகமெங்கும் பரவிற்று. நகரந்தோறும் எப்பொழுதும் யாவரும் பசவநாமத்தையே உச்சரித்துவருவர். திங்கட்கிழமைதோறும் விடுமுறை நாளாகக் கருதிப் பசுக்களைப் பூசித்து ஆலயங்கட்குச் சென்று விதிப்படிக் கடவுளைத் தரிசித்து, வருவர் அங்குள்ள அனாதைகளாகிய ஏழை மக்கட்கு அன்னமும் ஆடையும் அளித்து நல்லுபதேசம் புரிந்துவருவர். எல்லோருடைய மனதும் பளிங்கினும் தெளிவுற்று விளங்கின.

வைதிக மதங்கள்.

ஆஸ்தான வித்துவான் சிரசி. சாந்தகுரு சாஸ்திரிகள், மைசூர்.

நமது பாரதக்கண்டத்தில் வேதங்களின் ஆதாரத்தினால் பல மதங்கள் தோன்றியிருக்கின்றன. இந்த வைதிக மதங்களுள் சில மதங்கள் வேதங்களிற் கூறப்பட்டுள்ள மந்திரங்கள் அனைத்திற்கும் உடன்பாடில்லாமல் இருக்கின்றன. எந்த மதங்கள் வேதாதாரங்கொண்டு தோன்றி இருக்கின்றனவோ அந்த மதங்கள் எல்லாம் வேதத்தின் ஓர் பாகத்திற்கு வேறுபட்டனவாக இல்லாது உடன்பட்டனவாகவே இருக்க வேண்டுவது நியாயமாகின்றது. வேதங்களின் ஆதாரத்தினால் தோன்றினதாயினும் அந்த வேதத்தின் சில வாக்கியங்களுக்கே பிரமாணத்தைக் கூறிச் சில வாக்கியங்களுக்கு அப்பிரமாணத்தைக் கூறுவதால் பொதுவாக வேதப்பிரமாணத்தை ஒப்புக்கொண்டதாகாது. ஆண்டுவேதத்தின் ஆதாரத்தினால் தோன்றியதெனக் கூறுவதே ஏற்புடைத்தன்று. அப்படி வேதத்தின் ஏகதேசத்தை அங்கீகரித்து வேதோக்த மதமென்று கூறும்பொழுது உலகத்திலிருக்கும் அவைதிக மதங்களுங்கூட வைதிக மதமென்றே கூறவேண்டியதாகின்றது. பொதுவாக அவைதிக மதங்களுள்ளும் கடவுளுண்டு; பரலோகமுண்டு; பிறவியுண்டு; புண்ணிய பாவங்கள் உண்டு; வருணாச்சிரமங்களுண்டு; என்று கூறும் மதங்களும் பலவுள்ளன. இன்னும் எவ்வளவோ மதங்களில் கடவுளில்லை; பரலோகமில்லை; பிறப்பில்லை; புண்ணிய பாவங்களில்லை; இன்பமே மேலுலகம்; என்று கூறும் மதங்களுங்கூட பலவாகின்றன. வேதாதாரங்களை மேற்கொண்டு தோன்றியிருக்கும் மதங்களும் வேதத்திற்காணப்படும் சில அம்சங்களை ஒப்புக்கொள்ளுவதனாலேயே வேதோக்த மதங்களென்று கூறப்பட்டு வருகின்றன. சாங்கிய யோக வைசேஷிகாதி மதங்களும் சில பாகத்தில் வேதசம்மதமாகக் காணப்படினும் சில முக்கிய பாகங்களில் வேறுபாடாகக் காணப்படுவதனால் வேதவிரோதமானவையென ஆரியர் துணிந்திருக்கின்றனர். சாங்கிய மதத்தினராகிய கபிலமுனிவர் வேதத்திற் கூறியபடி கடவுளே உலகத்திற்குக் கர்த்தாவென்று கூறுவதைவிட்டு சடரூபமான பிரகிருதியே உலகத்

திற்குக் கருத்தாவென்று கூறுகின்றனர். இங்ஙனங் கூறுவதனல். "யதோவா இமானி பூதானி ஜாயந்தே" பரசிவனிடத்தில் இருந்தே சராசர வடிவமான உலகம் தோன்றிற்று என்பது முதலான சுருதி வாக்கியங்களுக்கும், பரசிவத்தின் உருவம் குணம் நிறைவு முதலிய வற்றைக் கூறும் "ஊர்த்துவரேதம் விரூபாக்ஷம்" முதலிய சுருதி வாக்கியங்களுக்கும் பயனே இல்லாமற் போகின்றது. சேதனப் பொருளின் உதவியில்லாமற் போகவே ஜடரூபமான பிரகிருதியினுல் சேதனு சேதன ரூபமாகிய உலகம் தோன்றுவது என்னுஞ் செயலே இல்லாமற் போகின்றது. அன்றியும் பிரகிருதிக்கே உலகவடிவாகப் பரிணமிக்கின்ற திறமையில்லை. இங்ஙனம் சாங்கிய மதத்தில் பிர கிருதி கருத்தத்துவத்தை விட்டால் பொதுவாக மற்ற இலக்கணங் கள் வேதத்திற்கு உடன்பாடாகின்றன.

இன்னும் யோகமதத்தைப் பின்பற்றிய பதஞ்சலி முனிவரும் சாங்கிய மதத்தைப் போலவே உலகத் தோற்றத்திற்குப் பிரகிருதியே காரணமென்று கூறுவதன்றியும் ஈஸ்வரன் நிமித்த காரணனென்றும் உடன்படுகின்றனர். இங்ஙனங் கூறுவதனுல் மூவகைக் காரணத் தன்மையும் இறைவனுக்கே உரியதெனக் கூறும் சுருதி வாக்கியங்கள் பயனற்றனவாகின்றன. வேத விரோதமான இந்த அம்சமொன்றை விடுத்து யோக சாஸ்திரத்திற் கூறிய இயமம், நியமம், ஆசனம், பிராணு யாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணைகள் எல்லாம் வேதத்திற்கு இன்றியமையாத உடன்பாடானவைகளாகவே இருக் கின்றன. இதனுல், நியாய வைசேஷிக மதத்தினரும் வேதோக்த மான ஈஸ்வரனை உலக காரணனென்று கூறுமல் பரமாணுவே காரண மென்று கூறுகின்றனர். இன்னும் ஈஸ்வரனை நிமித்த காரணனென்று அங்கீகரிப்பதன்றி ஆப்தவாக்கியத்தினுல் கடவுளுண்மையை நாடாது அனுமானத்தினுல் நாட்டுகின்றனர். இப்படிப்பட்ட கருத்துக்களே யன்றிப் பொது வகையில் பெரும்பாலான கருத்துக்கள் எல்லாம் வேதத்திற்கு உடன்பாடாகவே இருக்கின்றன.

இங்ஙனம், வேதத்தின் முக்கியமான கருத்துக்களுக்கே விரோத மாயிருப்பதனுல் சாங்கியம், யோகம், வைசேஷிக முதலான மதங்கள் அவைதிக மதங்களென்று பூருவாசாரியர்கள் கண்டித்திருப்பதனுல்

அம்மதங்களில் அமுதத்திற்கு ஒப்பான பல கருத்துக்கள் இருந்தும் விஷக்கலப்புண்ட அன்னமெனவே வைதிக மதங்களால் அவையனைத்தும் விலக்கப்பட்டன. இன்னும் சில மதங்கள் ஈஸ்வரனே உலகத்திற்குக் கருத்தாவென்று கூறினும் வேதத்தின் சில பிரமாணங்களை ஒப்பிச் சிலவற்றை ஒப்பாதிருத்தலினால் அவைகளும் வேதைகதேசீய மதங்கள் (வேதத்தைச் சிறுபான்மை ஒத்துக்கொள்ளும் மதம்) எனப் படுகின்றன. "த்வாஸுபர்ணாஸயுஜா" என்ற மந்திரம் தேகமாகிற வீருக்ஷத்தை பரமாத்மா சீவாத்மா என்னும் இரண்டு பறவைகள் பற்றிக்கொண்டு இருக்கின்றன வென்றும், அவைகளில் சீவாத்மாவென்னும் பறவை வினைக்கீடான இன்ப துன்பங்களாகிற வித்தைத் தின்று கொண்டு இருக்கின்றன வென்றும், பரமாத்மா வென்னும் பறவை இன்ப துன்பங்களுள் ஒன்றை அனுபவியாமலே எங்கும் வியாபித்துக் கொண்டிருக்கின்றதென்றும், சீவாத்மாவைவிடப் பரமாத்மா பின்ன ஸ்வரூபமானது என்றும் போதிக்கின்றது. "தத்வமசி, அகம்பிரம் மாஸ்மி, அயமாத்மாபிரம்மா" இவை முதலான பல சுருதிகள் பரமாத்மா சீவாத்மாவினின்றும் பின்னன் அல்லவென்றும், சீவன் பரமாத்மாவிற்கு அபின்னனென்றும் போதிக்கின்றன. இன்னும் சில மந்திரங்கள் பரமாத்மா நிர்க்குண சொரூபனென்றும், சிலமந்திரங்கள் அநந்த கல்யாணகுண ஸ்வரூபனென்றும் போதிக்கின்றன. அவைகளில் பேதபோதகமான வாக்கியங்கள் மாத்திரம் த்வைத சித்தாந்தத்திற்கு உதவியாகின்றனவேயன்றி அவை அத்வைத சித்தாந்தத்திற்கு உதவியாக நிற்பவையல்ல. "அகம்பிரம்மாஸ்மி" முதலான வாக்கியங்கள் அத்வைத மதத்தை நிலைநாட்டுகின்றனவல்ல.

வைதிக மதங்கள் எல்லாவற்றிற்கும் பரமப்பிரமாணம் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற வேதங்களில் சிலபாகம் பிரமாணமென்றும், சில பாகம் அப்பிரமாணமென்றும் கூறுவதனால் பரம பவித்திரமாகிய சுருதி தேவியினிடத்தில் குற்றத்தைக் கற்பித்ததாகின்றது. இங்ஙனம் வேதத்தின் ஏகதேசத்தைப் பிரமாணமென்றும், ஏகதேசத்தை அப்பிரமாணமென்றும் கூறுதலால் வேதத்தில் இருக்கின்ற சப்தசக்தியும் குறைபாடுடையதாகின்றது. ஆதலினால், ஸ்ரீரேணுகாதி பகவத்பாதர்கள் பேதாபேத ரூபமான சக்தி விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைத் தாபித்து, சுருதிப் பிரதி வாதங்களாகின்ற த்வை

தாத்வைத வாக்கியங்களுக்கும், சகுண நிர்க்குண வாக்கியங்களுக்கும் உள்ள வேறுபாட்டை நீக்கித் தமக்கை தங்கையைப் போலிருக்கிற எல்லாச் சுருதி வாக்கியங்களுக்கும் பரஸ்பர ஸ்நேகாபிவிருத்தியைத் தோற்றுவித்துப் பரமாத்மா என்னும் பதியினிடத்தில் பெருவிருப்பத்தைத் தோற்றுவித்திருக்கின்றார்கள். இந்தவிதமாக உலகம் போற்றும் மாட்சிமையுடைத்தாகிய இந்த சித்தாந்தத்தின் உண்மைநிலையை யாவரும் எளிதில் உணர்ந்துகொண்டு பரசிவத்தின் கருணைக்குப் பாத்திரராக வேண்டுமென்று அவாவுகின்றேன்.

சக்தி விசிஷ்டாத்வைத மதம்.

ஆஸ்தான வித்துவான் சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

துவிதம், அத்துவிதம், விசிஷ்டாத்துவிதம் முதலிய மதங்களைப் போன்று சக்தி விசிஷ்டாத்துவித (வீரசைவ) மதமும் ஒரு தனித்தலைமைவாய்ந்த வைதிக மதமாகின்றது. அங்ஙனமிருந்தும் சிலகாலமாக, சமஸ்கிருத வித்தையைப் பயிலாதிருக்கின்ற சில வீரசைவர்கள் தேச பாஷையிலிருக்கின்ற அத்துவித பரமான பஞ்சதசி, விசார சாகரம், வாசிஷ்டம், ஞானச்சிந்து முதலிய நூல்களைப் பார்த்துவந்தமையால் மாயாத்வைத சித்தாந்தமே வீரசைவ சித்தாந்தமென்று மயங்கிப் பவித்திரமானதும், சகல சுருதி சம்மதமானதும், மிக்க சநாதனமானதுமான தமது சக்தி விசிஷ்டாத்வைத தத்துவத்தைக் கைவிட்டுப் பெயரளவில் இலிங்கதாரிகளென்று கூறிக்கொண்டு வருகின்றார்கள்.

வழக்கத்தில் உலகத்தின்கண் யாருக்கு எந்த பாஷையில் பயிற்சியிருக்கின்றதோ அந்த பாஷையில் உள்ள நூல்களைப் படிப்பதனால் அந்நூல்களில் அபிமானந் தோன்றுவது வியப்பன்று; அஃது இயற்கையே. உலகத்தில் அந்தந்த மதத்திற்றோன்றிய பண்டிதர்கள் தத்தம் தேச பாஷைகளில் தத்தம் மதக்கிரந்தங்களை எழுதி வெளியிட்டு வந்திருப்பதனால் அந்தந்த கிரந்த கருத்தாவின் புகழும், மதத்தாபகராகிய ஆசாரியர்களுடைய மகத்துவமும் மக்களிடத்து வேரூன்றி

நிற்கின்றன. தொன்றுதொட்டு சமஸ்கிருத பாஷையிலிருந்த அத்வைத கிரந்தங்களை அந்த மதாபிமானிகளான பண்டிதர்கள் தேச பாஷையில் மொழிபெயர்த்து வந்திருப்பதனால் இப்பொழுது யாருடைய கையிற் பார்ப்பினும் அத்வைத நூல்களே காணப்படுகின்றன. சிலகாலமாக, சக்தி விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை அறிந்த வீரசைவ பண்டிதர்கள் வீரசைவ சமாஜத்தில் குறைந்துவந்தமையால் சமஸ்கிருத பாஷையிலிருந்த கிரந்தங்கள் புழுக்களுக்கு இரையாயினவேயன்றித் தேச பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பரவுதற்கிடமில்லாமலும் போயின. சில பண்டிதர்கள் ஆங்காங்கே இருப்பினும் அவர்கள் சித்தநூல்களைப் பாராமல் கேவலம் காவிய நாடகங்களைப் பார்த்து வருவதனாலேயே காலத்தைக் கழித்துத் தத்தம் குடும்ப பரிபாலனத்தை மட்டிலும் பார்த்து இகலோக யாத்திரையை முடித்தார்கள். மடாதிகாரிகள் என்போர் சிலகாலமாக சமஸ்கிருத பாஷையிலுள்ள கிரந்தங்களை அறியாமல் கேவலம் மந்திரகோப்பியம், மிசிரார்ப்பணம் முதலியவற்றை மேற்கொண்டு, வீரசைவ சித்தாந்தத்திற்கிணங்க நித்திய நைமித்திகாதி கருமங்களைத் தத்தம் பக்தர்கட்கு முறையாகக் கற்பிக்காமலே வந்துவிட்டார்கள். இன்னுஞ் சிலர் தத்தம் கைகளில் எங்கெந்த தேசபாஷை நூல்கள் கிடைத்தனவோ அந்த நூல்களையே ஓதி அதன்கண் காணப்படுபவைகளை யெல்லாம் தமது மதத்திற்குச் சம்பந்தப்பட்டனவென்று மயங்கி யுணர்ந்தமையால், வீரசைவ சித்தாந்தத்திற்கு அனுகுணமான உபாசன மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் விட்டுவந்தனர். இதனால், இப்பொழுது எங்கே நோக்கினும் சொல்மாத்திரமான அத்வைத ஆடம்பரமே மிகுந்து குருசிஷ்ய பாவம் கீழ் மேலாய் அதருமத்திற்கே இடந் தருவதாயிற்று. சிலர் கன்னடத்தில் இருக்கின்ற நிசகுணருடைய ஆறுநூல்களைப் படித்து இவையே சட்சாஸ்திரங்களென்று பிரமித்து இந்த கிரந்தத்திலிருக்கும் சக்தி விசிஷ்டாத்வைத மதம், அத்வைத மதம் ஆகிய இரண்டின் வேறுபட்ட இலக்கணங்களை யுணராது அவற்றில் காண்பன வெல்லாம் வீரசைவ மத தத்துவங்கள் என்றே உணர்தலால் சுய மதத்திற்கே விரோதிகள் ஆகின்றார்கள்- வேறு சில பண்டிதர்கள் அம்மதிஞரினும் மேற்பட்டவராகி, கன்னடத்தில் எழுதப்பட்டிருக்கும் விசாரசாகரம், பஞ்சதசி, வாசிஷ்டம் முதலான நூல்களைப் படித்து மாயாத்வைதமே வீரசைவ சித்தாந்த

மென்று சொல்வதனல் தத்தம் சொந்த மதத்திற்கே விரோதிகள் ஆகின்ருர்கள்.

இங்ஙனம், வீரசைவ நூல்கள் தேச பாஷைகளில் வெளிவரா திருத்தலினாலும், கன்னடப் பாஷையில் மொழி பெயர்க்க வல்ல பண்டிதர்களின் தொகை நாளடைவில் குறைந்து வந்தமையாலும், ஸ்ரீஇரேணுகாதி பகவத் பாதர்களால் பிரதிட்டை செய்யப்பெற்ற அப்பிராகிருத சிவதரும அனுஷ்டானங்கள் குறைவுபட்டமையால், பிராகிருத நியமங்கள் சமாஜத்தில் தலையெடுத்து வரலாயின. உலகத்தில் அறியாமை மிக்க மக்கள் தாம் எது எதைப் படிக்கின்ருர்களோ அவையெல்லாம் நமது மதத்திற்குச் சேர்ந்தவையென்று உணர்வது இயற்கையாகின்றது. இவற்ருல், பூருவாசாரியர்களுடைய மகாவாக்கிய உபதேசங்களின் வலிமை தளர்ந்து வரலாயிற்று. அந்தோ! எங்கு நோக்கினும் அறியாமை யுடையார் கைகளிலெல்லாம் பெரிதும் சிறிதுமாக அன்னியமத நூல்களே நடனமாடுகின்றன. இந்த மதத்தில் சிறுபான்மையாக அறிவுடையாராகக் காணப்படுபவரும் வீரசைவர்கட்கு இலிங்க தாரணமும், இலிங்க பூசையும் வேறேயன்றி மற்றவைகளெல்லாம் அத்வைத அநுபவங்களே யென்று மாறுபடக் கூறுபவராயிருக்கின்றனர்.

இப்பொழுது சமாஜத்தில் பலர் சமஸ்கிருத பாஷா வல்லவராகி நடவடிக்கையில் வேரூன்றி நிற்கும் இந்த விஷம சமஸ்காரத்தைக் களைந்து சுபதருமத்தைப் பிறப்பிப்பதற்காகத் தாம் வீரசைவ சித்தாந்தத்தை நன்குணர்ந்துகொண்டு அந்த மூலக் கிரந்தங்களைக் கன்னட பாஷையில் மொழிபெயர்க்குஞ் செயலில் தொடங்கி எத்துணையோ நூல்களை வெளிப்படுத்தி மாயாத்வைதத்திற்கும், சிவாத்வைதத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறிவித்து வருவது ஆசாரிய பகவத் பாதர்களுடைய பெருங்கருணை யென்றே பாராட்டுதல் வேண்டும். இதனல், இப்பொழுது எத்துணையோ இடங்களில் அசமஸ்கிருதர் களாகிய மக்கள் கண் திறந்துகொண்டு, சுயசித்தாந்தத்திற் கூறியுள்ள தருமங்களைத் தெரிந்துகொண்டு, முன்னர் கையாண்டுவந்த விரோத தருமங்களை விடுத்து நன்னெறிக்கு வந்திருக்கின்றனர்.

வீரசைவ மதத்திற்கும், அத்வைத மதத்திற்கும் யாதொரு தொடர்புமில்லை. பெரும்பான்மையும் இவ்விரண்டிற்கும் வேறுபாடு உண்டேயன்றி ஒன்றிலாயினும் ஒற்றுமையில்லை. இந்த மதங்களின் மூலக் கருத்தாக்களும் வேறு வேறாயிருக்கின்றார்கள். சக்தி விசிஷ்டாத்வைத (வீரசைவ) மதத்திற்கு ஸ்ரீஇரேணுகாதி பஞ்சாசாரியர்கள் கருத்தர்களாவதுபோல அத்வைத மதத்திற்குச் சங்கராசாரியர் கருத்தராகின்றனர். இரேணுகராதியாசாரியர்கள் ஞானகர்ம சமசமுச்சயத்தினால் முக்தியென்று கூறியிருப்ப, சங்கராசாரியர் ஞானமொன்றினாலேயே முக்தி என்கின்றனர். பஞ்சாசாரியர் ஜகத்து சத்தியமென்று கூற, சங்கராசாரியர் மித்தை யென்கின்றனர். பஞ்சாசாரியர் பிரமம் சருவஞ்ஞத்வாதி கல்யாணகுண விசிஷ்டமுடையது என்றால், சங்கராசாரியர் நிர்விசேஷமுடையது என்கின்றனர். பஞ்சாசாரியர் சுருதிகளிற் கூறப்பட்ட பேதம், அபேதங்களிரண்டும் பாரமார்த்திகம் என்றால், சங்கராசாரியர் அபேத மொன்றே பாரமார்த்திகம் என்கின்றனர். இரேணுகாதி ஆசாரியர் சிவயோகத்தினால் முத்தி யென்றால், சங்கராசாரியர் விசாரத்தினாலேயே முத்தியுண்டு என்பர். பஞ்சாசாரியர்கள் சர்வ காரணனாகிய மகேசனொருவனையே பாதிவ்ருத்திய தருமத் (கற்புடையறத்) தால் அருச்சிக்க வேண்டும் என்று விதித்திருப்ப, சங்கராசாரியர் ஆதித்தனாதி பஞ்சதேவதைகளின் பூசையை விதித்திருக்கின்றனர். இரேணுகராதியாசாரியர் அந்தக்கரண விருத்திகள் நித்தியமானவை என்பரேல் இவர் அநித்தியமென்று நவில்வர். பஞ்சாசாரியர் சக்தி பிரமத்தின் அபின்னமாயிருத்தலினால் முக்தி தசையில் சொரூபத்தில் நஷ்டம் ஆகாமலே தனக்கு மூலபூதமான சிவசக்தியில் லீனமாகின்றதென்று கூறவே, இவர் பிரமஞானத்தினால் அவித்தை சொரூபத்தில் நஷ்டமே ஆகின்றதென்று கூறுகின்றனர். இரேணுகராதியாசாரியர் ஜகத்பிரமத்தின் பரிணாமமென்றால் இவர் விவர்த்தம் என்பர். பஞ்சாசாரியர் சிதி சக்தியின் சங்கோச ரூபமான சித்தவிசிஷ்டனே சீவனென்று அருளினால், சங்கராசாரியர் அந்தக்கரணத்தில் பரிணமிக்கும் பிரமமே சீவர்களென்று கூறுவர். இரேணுகாசாரியர் சித்த விகாரத்தினால், சிவத்துவப் பிராப்தி யென்று உரைத்தால், சங்கரர் சித்தமாதிகள் நாசமடைந்து பரமானந்தப் பிராப்தியே முக்தியென்று கூறுவர். ஸ்ரீரேணுகாதியாசாரியர் தமது சித்தாந்தத்திற்குச் சக்தி விசிஷ்டாத்

வைத சித்தாந்தமென்று பெயரிடுவரேல், சங்கராசாரியர் தமதை அத்வைத சித்தாந்த மென்று நாமமிட் டழைப்பர். இவ்வாறு எல்லா வகையிலும் வேறுபாடான இலக்கணங்களே காணப்பட்டு வருவதனுல், அத்வைத மதத்திற்கும் சக்திவிசிஷ்டாத்வைத (வீரசைவ) மதத்திற்கும் ஏற்றத் தாழ்வான வேறுபாடுகளிருந்தும் இவற்றுள் ஒன்றையேனும் ஆராய்ந்து பாராமல் ஆங்காங்கு கூறப்பட்ட சில அத்வைத பரமான வாக்கியங்களைச் செவியினுற் கேட்டமாத்திரத்தானே பூருவாபரப் பிரகரணங்களைப் பாராது இந்த வீரசைவ மதத்தை அத்வைத சித்தாந்தத்தில் அடக்குவரேல், ஆசாரிய பகவத் பாதர்களால் அருளிச் செய்யப்பெற்ற முக்தி சாதனங்களாகின்ற பக்தமேக சாதி சடுஸ்தலாசரணைகளும், நூற்றொரு ஸ்தலங்களும், அஷ்டாவரணங்களும் மாமிச பிண்ட நிவர்த்தி பூர்வக மந்திர பிண்டத்வப் பிராப்தி ரூபமான சிவதீக்ஷா பூர்வக இலிங்கதாரண மகாவிரதமும் ஆகிய இவைகட்கெல்லாம் அர்த்தமில்லாமற் போகின்றது. இவைகளை யெல்லாம் மறந்து, தமது ஆசாரியர்களுடைய நெறிக்கு விரோதமாகி, தவருனவழியில் காலிடுகின்ற இப்படிப்பட்ட மக்களின் மகோபகாரத்திற்காக இப்பொழுது சில வீரசைவ பண்டிதர்கள் சமஸ்கிருத பாஷையிலிருக்கின்ற சக்தி விசிஷ்டாத்வைத சித்தாந்தக் கருத்துக்களை கன்னடமொழியில் வெளிப்படுத்தி அன்னியமத நூல்களை மேற்கொண்டதனுலுண்டான மயக்கத்தைப் போக்கி இலிங்க தருமம் உலகைததில் பரவும்படிச் செய்துவருகின்றுர்கள். இத்தகைய பேரறிவாளர்களுக்கு ஸ்ரீஜகத்குரு பஞ்சாசாரியர்கள் பெருங்கருணை செய்ய வேண்டுமென வேண்டுகின்றேன்.

தீக்ஷையே மோக்ஷசாதனம்.

உலகத்தின்கண் துன்பமயமான குடும்பக் கடலைத்தாண்டி முக்தராதற்குப் பற்பல நெறிகளைக் காட்டியிருப்பதனுல் பற்பல மதங்கள் ஏற்பட்டன. வீரசைவ சித்தாந்தப்படி சீவாத்மா அடையவேண்டிய முத்திப்பேற்றிற்குச் சீவாத்மாவே கருத்தாவன்று; பரமாத்மாவாகிய சிவபெருமானே கருத்தா. சீவனுக்குக் கலாதியோகம், கருமக்ஷயம், மலபரிபாகம், சக்திபாதம், குரூபசதனங்கள் உண்டான பின்னர் சிவ

சக்திரூபமான தீக்ஷையென்னும் சிவகரணத்தினல் பற்றற்ற ஞான சித்திரூபமான மோக்ஷமென்பது சித்திக்கின்றது. பசுத்துவத்தைக் கெடுத்துச் சிவத்துவத்தை உண்டாக்குகின்ற இந்த தீக்ஷையானது, சீவனுக்கும் சிவனுக்கும் சந்தான சம்பந்தத்தை யுண்டாக்குவதனல் இது சிவனுக்கே காரணமாகின்றது. எந்தச் சீவனுக்கு மீண்டுந்தோற்றக் கேடின்மையாகிய சிவசாயுஜ்ஜியம் சித்திப்பதற்காக அவன்மேல் சிவ சக்தி பாதம் உண்டாயிருக்கின்றதோ அவனிடத்தில் மோக்ஷாபேக்ஷை, சம்சாரத் துவேஷம், சிவ பக்தரிடத் தன்பு, சிவ சாஸ்திர சிரத்தை, சத்குருபசதன விருப்பம் முதலான நற்குறிகள் உண்டாகின்றன. இங்ஙனம், சக்தி பாதத்தை யடைந்த சீவன் "சதேசிக மநுப்ராப்ய தீக்ஷாவிச்சின்னபந்தந:, ப்ரயாதி சிவசாயுஜ்யம் நிர்மலோ நிருபப்லவ:" என்ற ஸ்வாயம்புவாகம வசனப்படி சத்குருவை யடைந்து, அவர்பால் தீக்ஷா சமஸ்காரத்தை அடைந்து, மலவிமோசனம் பெற்று, சாயுஜ்யத்தை அடைவான். இத்தகைய காரணத்தால் தீக்ஷையில்லாமல் மோக்ஷமடைதல் இல்லையென் றேற்படுதலால் வீரசைவர்களுக்கு எல்லாவற்றினும் முக்கியமாகிற கருமம் யாதென்று ஆராயின் இந்த தீக்ஷையாகிற சத்கருமமே இன்றியமையாததாகின்றது. பற்பல பிறவியிற் கிடைத்த சிவபக்தியினல் கருமநாச முதலியவற்றை யடைந்து, முடிவான சரீரத்தைப்பெற்று, சக்தி பாதத்தினல் சிவதீக்ஷையைப் பெறுவதே நூதனமாக வீரசைவமத தருமத்திற் புகுதற்குரியாரது செயலாகும். வீரசைவ தீக்ஷா சமஸ்காரப் பரம்பரையாகப் பெற்றுவரும் மாதா பிதாக்களிடத்துத் தோன்றிய மாணவ மாணவிகளிடத்தில் முடிவான சரீரத்துவமும், தீக்ஷாவருகத்துவமும் தாமாகவே சித்தித்திருக்கின்றன. "ஏகேநஜந்ம நா முக்திர் வீராணுந்து மகேஸ்வரி" என்ற சிவாகம வசனமும் அதே பொருளை விளக்குகின்றது.

"அமிர்தஸ்ய தேவதாரணோ பூயாசம்", "சர்வலிங்கம் ஸ்தாபயதி" முதலான சுருதி வசனங்களினல் பிரதி பாதிக்கப்பெற்ற இலிங்கதாரணம், "பூத்யை நப்ரம திதவ்யம்" என்பது முதலான சுருதி வசனங்களினல் பிரதி பாதிக்கப்பெற்ற விபூதிதாரணம் முதலிய வீரசைவ நியமங்களெல்லாம் வைதிகங்கள் ஆகின்றமையால் அவைகளின் விதாயகமாயிருக்கின்ற இந்த சிவதீக்ஷையும் வைதிகமே ஆகின்றது. இன்

னும் ருக்வேதத்தில் "பவித் ரந்தே விததம் ப்ரஹ்மண ஸ்பதே ப்ரபுர் காத்ராணி பர்யேஷி விஸ்வத:, அதப்த தநுர்நத தாமோஸ்நுதே ஸ்ருதாஸ இத்வஹம் தஸ்தத்ஸமாஸத" என்ற வசனத்திற்கு ஸ்ரீவேதவியாசர் "ப்ரஹ்மேதி லிங்கமாக்யாதம் ப்ரஹ்மண ஸ்பதிரீஸ்வர:, பவித்ரம் தத் திவிக்யாதம் தத் ஸம்பர்காத் தநுஸ்யுசி:, ருகித்யாஹ பவித்ரந்தே விததம் ப்ரஹ்மண ஸ்பதே, தஸ்மாத் பவித்ரம் தல்லிங்கம் தார்யம் சைவமநா மயம், அதப்த தநுரஜ்ஞோவை ஆமஸ் ஸம்ஸ்கார வர்ச்சித:, தீக்ஷயா ரஹிதஸ் ஸாக்ஷாந் நாப்நுயால் லிங்கமுத்தமம்", ய:கரோதி தப:பூர்வம் ஸதப்த தநூருச்யதே, பரிபக்வோ விமோக்ஷாய நோஸ்நுதே லிங்கதார ணம்" என்று பொருளுரைத்து சிவதீக்ஷையினல் மலத்திரயநாசம் பெற்று இலிங்கதாரண சப்பன்னனுனவனே முக்தனுகின்றுனென்று கூறியிருக்கிறபடி இந்தப் பிரத்தியக்ஷ சுருதி வசனத்தினுலும் ஏற்கத் தக்கதாகின்ற காரணத்தினுல் தீக்ஷாகருமம் வைதிகமென்பது ஐயமற வுணர நிற்கின்றது.

இந்த தீக்ஷை சாதாரம், நிராதாரம் என இரண்டு வகைப்படும். ஆசாரி முகமாகச் செய்யப்பெருது சிவபெருமான் முகமாக தீவிர சக்திநிபாதத்தை அடைந்தமையால் பசவேசருக்குச் சங்கமநாதர் வந் துபதேசித்தாற் போலவும், மாணிக்கவாசகருக்குப் பெருந்துறைப் பெருமான் எழுந்தருளி யுபதேசித்தாற் போலவும் செய்யப்பெறுவது நிராதார தீக்ஷையெனப் பெறும். குருமூர்த்தியை அடைந்து அவர் முகமாக மந்தசக்திநி பாதத்தை அடைந்து பெறத்தக்கது சாதார தீக்ஷையெனப் பெறும். அந்தச் சாதார தீக்கை சபீஜம், நிர்ப்பீஜம் என இருவகைப்படும். சபீஜதீக்கை சித்த பரிபாகமடைந்த சமர்த்த ராகிய விராகிகளுக்கும், ஞானிகளுக்கும் உரியது. நிர்ப்பீஜ தீக்கை சமயாசாரத்தை அனுசரித்துப் பால விருத்தாதிகளுக்கே செய்யப் பெறுவது. அந்த சபீஜ தீக்கையில் சிவதருமணீ தீக்கை, லோக தருமணீ தீக்கை என இரண்டு பிரிவும் உண்டு. நிர்ப்பீஜ தீக்கையில் சத்தியோ நிர்வாண தீக்கை, சிரநிர்வாண தீக்கை என இரண்டு பிரி வும் உண்டு. முதலாவது சிவதருமணீ என்பது லௌகிக தர்மாதர்ம சம்பந்தமில்லாமல் கேவலம் சிவாயத்த ஞானசாணையுள்ளது. இரண் டாவது லோகதருமணீ என்பது சிவதருமாசரணையுடன் அதற்கு மாறுபாடான லௌகிக தருமாசரணையிலும் உள்ளது. சத்தியோ

நிர்வாண தீக்கையென்பது அதிதீவிர பாதத்தினல் தேகாதியின் பற்றற்று முழுவிரக்தராய் இருப்பவர்க்கே செய்யப்பெறுவதும், உடனே முக்தி கொடுக்கத் தக்கதுமா யிருப்பது. சிரநிர்வாண தீக்கை பிராரத்த கரும போகானந்தரத்தில் முக்தியைக் கொடுக்கத் தக்கதாகிப் பாலராதியர்களுக்கே செய்யத் தக்கதா யிருப்பது. இப்பொழுது நமது வீரசைவ சமூகத்தில் நால்வாயிலாக வழக்கத்திற் செய்யப் பெற்றுவருவதோ சாதாரமும், நிர்ப்பீஜமும், சிரநிர்வாணமும் ஆகிய தீக்ஷையின் சம்பந்தமானதே யென்று அறியத்தக்கது.

இந்த தீக்ஷையில், ஆஞ்ஞா தீக்கை, உபமா தீக்கை, ஸ்வஸ்திகா ரோகண தீக்கை, கலசாபிடேக தீக்கை, விபூதிபட்ட தீக்கை, ஆயத்த தீக்கை, ஸ்வாயத தீக்கை என்று ஏழுவகைகளுண்டு. அவையனைத்தும் ஆட்சிமுறை விதியில் அடங்கியிருக்கின்றன.

தீக்கை அனைத்தும் வேதா, மனு, கிரியா என்னும் முக்கிய மூன்று பிரிவினையுடையன; குருபுங்கவர் சிகாசக்கரத்தின் பேரொளியைத் தமது கையில் இழுத்து வைத்துக்கொண்டு, அதனைச் சீடனது கபாலத்தின் மேல்வைத்து, பாவலிங்கத்தைக் காரணசரீரத்தின்கண் நிலைபெறச் செய்வதே வேதா தீக்ஷையெனப் பெறும். செவியின்கண் மந்திரோபதேசத்தைச் செய்து, பிராணலிங்கத்தைச் சூக்கும சரீரத்தின்கண் தாபிப்பதே மனு தீக்ஷையெனப் பெறும். தூல தேகத்தின்கண் இஷ்டலிங்க தாரணஞ் செய்வதே கிரியா தீக்ஷையெனப் பெறும். "குண்டமண்டப ஹோமாத் யைர்ந்யா ஸைரத்வ கலாதிபி:, மந்திரோபதேச சகிதா கிரியா தீக்ஷேதி கீயதே" என்ற வாதுளாகமப்படி இந்த தீக்ஷைக்கே கிரியா தீக்ஷையென்னும் விவகாரமுண்டு.

சிவதீக்ஷையினல் சிவத்துவத்தை யடைந்தவன் "நாஸிவஸ்ஸிவ மர்ச்சயேத்" என்ற பிரமாணப்படி, சிவார்ச்சன யோக்கியதா சம்பன்னனுகி, முறையாக "தாரயந்தோ நராஸ்தூலம் காரணம் சம்பிரயாந்திஹி" என்ற பிரமாணப்படி, தூலலிங்க தாரணர்ச்சனதிகளினல் அந்தர்லிங்கானு சந்தான சாமர்த்தியத்தை யடைந்து, இரசகுளிகையுடன் கூடிய தாமிரம் பொன்னுகிய பிறகு தாமிரமாகிறதில்லையோ அப்படியே "சிவத்துவ நசஹீயேத விமுக்தோ தீக்ஷயாபவேத்" என்ற

பிரமாணத்தினல் சிவத்துவத்தை விட்டுத் திரும்பவும் சீவத்துவத்தை அடையான். எனவே, விமுக்தனுகிருன் என்றபடி. இங்ஙனம் மலத் திரயத்தை நாசஞ்செய்து ஞானசம்பந்தத்தைக் கொடுத்து முத்தியை யுண்டாக்குகின்ற காரணத்தினல் "தீயதே ஞானசம்பந்த: க்ஷீயதேச மலத்ரயம், தீயதே க்ஷீயதே யோ தீக்ஷேத்யே ஷானி பத்யதே" என்ற பிரமாணத்தினல் இதற்கு 'தீக்ஷை' என்ற பெயர் உண்மைப் பொரு ளுடையதாகின்றது.

இத்தகைய தீக்ஷையை "கர்ப்பாஷ்டமே க்ருதாதீக்ஷா முக்யாநா ஷோடஸாவதி, கௌணு ததூர்த்வ மதமா வீரசைவாங்வ வாயிநாம்" என்ற சிவாகம வாக்கியப்படி வீரசைவர்கட்கு 8-வது ஆண்டிலே செய்வது உத்தமம். அதைக் கடந்து 16-வது ஆண்டளவில் செய் வது மத்திமம். அதனையுங் கடந்து செய்வது அதமமே. இந்த நிய மப்படிப் பெண்களுக்கும் தீக்ஷா சருமம் முக்கியமானது. ஆனல் சிலர் பிறந்த பதினேராம் நாள் சாமானியமாகச் செய்யும் இலிங்க தாரணமே போதுமென நினைத்திருக்கின்றனர்; இங்ஙனங் கருதுவது மிகத்தவறு. பவித்தன்மை உண்டாகாதிருப்பதற்காகச் சிசுப்பிராயத் திற் செய்த சாமான்ய தீக்ஷையே விசேஷ தீக்ஷையைப்போல் பலனைத் தருவதன்று. ஷடத்வ சோதன பூர்வகமாகச் செய்யப்பெறும் இந்த தீக்ஷையும் விசேஷ வீரசைவராகிய சகல ஆண் பெண்பாலர்கட்கும் இன்றியமையாது செய்யத் தகுந்ததாகும். விசேஷ வீரசைவர்கள் எனக் கூறிக்கொள்ள விருப்பம் உடையவர்களே! இக்கட்டுரையின் இறுதிப் பத்தியின் கருத்தையாவது படித்துணர்ந்து உரியகாலத்தே உங்கள் புதல்வர்கட்கு விதிப்படி தீக்ஷைசெய்வித்து முடித்த பின்னரே திருமண முதலியன செய்ய வேண்டுமென வேண்டிக்கொள்ளும் முக மாகவே இஃது இதன்கண் எழுதப் பெற்றதென மீண்டும் ஞாபகப் படுத்துகின்றேம்.

—உரிமைத் தொண்டன்.

பாவலர் விருந்து.

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தோரமங்கலம்.

(க). சிவப்பிரகாசர்.

கற்றோர் உள்ளங் களிகூர்ந்து துய்க்க, அமிழ்தினுமினிய தமிழ்க் கவிச்சுவை யமுது விருந்தளிக்க வல்ல சிறந்த பாவலர்களுள் நமது துறைமங்கலம் சிவப்பிரகாசப் பெருமானாரும் ஒருவர். பல நூற்களை படிப்பவர், ஒரு புலவர் கூறிய கற்பனை வர்ணனைகளைப் பிறநூல்களிற் பிறபுலவர் கூறுவதையுங் காண்பர். யான் அறிந்தமட்டில் நமது பெருந்தகையார் கூறிய கற்பனைகளும், வர்ணனைகளும், உவமானங் களும் பிறிதொரு நூலிற் காணப்பட்டில. புதிய புதிய கற்பனைகளைக் கண்டமைக்கும் ஒருவித தெய்வீக ஆற்றல் அவருக்கு இயற்கையாய் அமைந்திருந்தது போலும். ஓர் கவிஞன் சாதாரணமாய்க் கருதத் தக்க விஷயம், நம் புலவர் பெருமானுடைய கருத்தில் தோன்றிக் கவி யுருவாக வெளிப்படுமாயின் கவிஞர்கள் வியந்து பாராட்டும் பெருமை யுடன் சிறந்து விளங்கும். முடிவாகத் துணிந்து கூறின், சங்ககாலத் தும், அதனையடுத்த மத்தியகாலத்தும் விளங்கிய புலவர்களுக்கு நமது அடிகள் ஒரு சிறிதுந் தாழ்ந்தோரல்லர். பிற்காலப் புலவர்களாகிய குமரகுருபரர், கச்சியப்ப முனிவர் போன்ற அறிஞர்களோடும் ஒருங் கெண்ணத் தக்கவரேயாவர். இத்தகைப் பெருமைபூண்ட அடிகளின் அருமைக் கவிகளை எடுத்துக் கருத்து விளங்கவுரைத்து அவரிட்ட விருந்தை நம்மனைய புலவர்கள் குழூஉவுடன் நுகர்வேமாக.

அடிகள் இயற்றியருளிய பிரபுலிங்கலீலை என்னும் நூலில் சிவ பெருமான் திருக்கைலையில் திருவோலக்கங் கொண்டிருக்கும் சிறப் பைக்கூற வந்தவிடத்தில்,

> "புரத்தை வென்ற நகைக்குமேன் போதினேன்
> சிரத்தை வென்ற செங்கைக்குஞ் சிலைமத
> னெரித்த கண்ணிற்கு மின்றெனக் கூற்றுதைத்
> தரித்த வீரக் கழலொடு தாளுற."

என்று இறைவன் திருவடிகள் கழல்பூண் டிருத்தற்குக் காரணம் கூறு கின்றார்; சிவபரஞ்சுடர் இயற்றியருளிய வீரட்டங்களுள் சிறப்புடைத் தாகிய திரிபுரதகனம், அயன்சிரங் கொய்தல், காமதகனம் என்னும் மூன்றையுஞ் செய்த நகை (பற்கள்), கை (விரல் நகம்). கண் (நெற்றி விழி) இவவகள், அவ்வீரத்துக்கேற்ப அணியத்தக்க வெற்றிப்பூண் களை அணிவதற்கு இயலாத இயற்கையவாக இருத்தலின் அவற்றை விட்டு, மார்க்கண்டன் பொருட்டுக் கூற்றுவனைக் குமைய் உதைத்த திருவடிக்கு மாத்திரம் வீறுதோன்றக் கழல் அணிந்தனர் என்ப. எனவே மேற்காட்டிய மூன்று வெற்றிகளும் பெருமான் உள்ளம் மகிழத் தக்கனவாயிராமல் திருவடிச் செய்தியே பேருவகைக் குரிய தாய் வெற்றிதோன்ற வீரக்கழல் அணியப்பெற்றது எனக் குறித் தனர். "நகைக்கும், கைக்கும், கண்ணிற்கும் இன்று" எனக்கூறிய வாற்றால் அடியிற் போதரும் உண்மைகள் விளங்குகின்றன.

திரிபுரதகனம், தேவர்கள் பொருட்டுப் பொதுப்பட நிகழ்தலா னும், அயன்தலை கொய்தது, அவனொருவன் தருக்கற் றுய்தல் வேண் டியதாதலானும், காமதகனம், தன் தன்மையறியாது தவறிழைத்த ஒருவனைச் செறுத்ததாகின்றதாலும் அவை புகழத்தக்க பெருமையும் தகுதியுமுடையனவல்ல; தன்னை உள்ளமுருக உவந்தேத்தி முற்றி லும் நம்பித் தஞ்சம்புக்க அன்பு துளும்பும் அடியவர்கட்கு இடர்தீர்ப் பதே தன் பெருங் கருணைக்குப் பொருந்தியதாதலானும், அஃது ஒன்றே தன் கடமைகளுள் தலைசிறந்ததாய் நிற்றலானும், அச்செயல் கண்டு பிற அடியார்களும் தன்னைச் சரணடைந்து வீடுபெற்றுய்ய வழிகாட்டுவதாய் அமைதலானும், பிறப்பிறப்பில்லாத தன்னை நெக்கு நெக்கு நினைப்பவர்களும் தன்னைப்போல பிறப்பிறப்புட் படாதுய்ந்து போமாறே ஆண்டவனுகிய தான் அளவற்ற பஞ்சகிருத்தியத் திரு நடனம் செய்யவேண்டி யிருக்கின்றதனுலும், அத்தாண் மலரே அடி யார்க்குப் புகலிடமாகி வீடுபேறருளும் விழுப்பமுடையதாகலானும், அவ்வடியே வீரக்கழல் சூடுதற்குத் தகுதியுடைத்தாம் என்றன்றே இறைவன் அதற்குக் கழல் சூடியருளினர் என ஐயன் திருவடிகளை இடையீடின்றி நினைக்குந் தமது காதல் அன்புதோன்ற உரைத்தரு ளிய இவ்வர்ணனையைப் போல வேறெப்புலவர் கவிகளில் எங்கேனும் கண்டதுண்டேல் கூறிக்காண்மின். (தொடரும்).

வீரசைவ சமய மகளிர் கடமை.

ஆஸ்தான வித்துவான் குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

உலகத்தின்கண் அவரவரது மததருமங்களாயினும் பொது தருமங்களாயினும் விளக்கமுற வேண்டுமாயின் அதற்கு மகளிர் (பெண்களே), மூலகாரணர்களென்று சொல்லுதல் வேண்டும். மகளிர் தருமிஷ்டராயிருப்பின் அவரது கருப்பத்திற் பிறக்கும் புத்திரர்களும் தருமிஷ்டரா யிருப்பர். அம்மகளிர் அதருமிகளா யிருப்பின் அவர்பால் தோன்றும் புதல்வர்களும் அதருமிகளா யிருப்பர். மக்கள் தமது பாலப்பருவம் கழியும்வரை தாய் தந்தையரிருவர் பக்கலிலேயே காலங் கழிப்பவராயினும் தாயினிடத்தில் பெரும்பாலும் பழகிவருகின்றார்கள். மக்களுடைய அறிவு பாலாவத்தையில் மிகத் தூய்மையும் சார்ந்ததன் வண்ணமாக மாறுந் தன்மையும் உடையதாயிருத்தலின், அம்மக்களது அறிவு வளர்ச்சிக்குக் காரணராகும் தாய் தந்தையர் எவ்விதமான பழக்கத்தைக் கொடுக்கின்றார்களோ, அதினும் தாயின் நடையுடை பாவனை எவ்விதமாக இருக்கின்றனவோ அப்படியே விளையாட்டாகப் பயின்றுவர நாளடைவில் நன்மை அல்லது தீமையான நெறியில் பழகிவிடுவது மக்களது இயற்கையாகின்றது. நவநவமாகப் பெருகிவரும் மக்களது அறிவு தீயசெயலுடைய தாயினது கூட்டுறவினால் களங்கமுடையதாகின்றது. நற்செயலுடைய தாயினது கூட்டுறவினால் நிர்மலமாக விளங்குகின்றது. "சம்சர்க்கஜா தோஷகுண பவந்தி" என்றாற்போல, யாருக்கு எப்படிப்பட்ட கூட்டுறவு மிகுதியாகின்றதோ அதற்கிணங்கிய அறிவு தோன்றுவது உலகானுபவமாய் இருத்தலின், யாதொன்றையும் அறியாத தூய்மையான புத்தியுள்ள மக்களது அறிவு கூட்டுறவினால் வேறுபடுமெனக் கூறுவது வியப்பாகுமா?

உலகத்தில் மகாவீரராகிய புதல்வரைப் பெற்றவரும் மகளிரே! சிறந்த பண்டிதர்களைப் பெற்றுதவியவரும் மகளிரே! சிவத்துவத்தையடைந்த மகாயோகிகளைப் பெற்றவரும் மகளிரே! உலக கண்டகராகிய துட்டர்களை ஈன்றவரும் மகளிரே! முழுமூடனைப் பெற்றவைய

விடுத்தவரும் மகளிரே! சக்கிரவர்த்தி பதவியை வகிக்கும் மன்னர் பெருமானைப் பெற்றவரும் மகளிரே! தனக்கென வாழாப் பிறர்க் குரியாளராகிய சான்றோரைப் பெற்றவரும் மகளிரே! எல்லாருடைய தோற்றத்திற்கும் பழக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருப்பவர் மகளிரே ஆதலினாலும், காரணத்தின்கண் காணப்படும் குணங்கள் அனைத்தும் காரியத்தின்கண்ணும் காணப்படுவது இயற்கையாதலினாலும், நம் பாரத மக்கள் அன்பும் அறனுமுடையராகி ஊக்கம், வீரம், வினைய முதலியவைகளினால் மேன்மையடைய வேண்டுமானால் பாரத மாதாவின் அமிசமாகிய மகளிரும் அன்புடன் கலந்த அறமுதலிய நற்குணம் நிறைந்தவர்களா யிருத்தல்வேண்டும். அன்னைமார் நித்தி யாசாரக் குறைவுள்ளவரா யிருப்பின் அவர்களுடைய மக்களும் நித்தி யாசாரக் குறைவுள்ளவரா யிருப்பர் என்பதில் ஐயமின்று.

ஆதலின், ஆஸ்திக மகளிர்கள் தாம் எந்த மதத்தில் பிறந்திருக் கின்றார்களோ அந்த மததருமத்தின் உண்மையை நன்கறிந்து, தீக்ஷா சமஸ்கார முதலியவற்றைக் காலத்தில் முறையாகப் பெற்று, அதன் படி அனுட்டித்து வருவார்களாயின், அவரவருடைய மக்களும் தத் தம் மததருமங்களில் சிரத்தையுடையவர்க ளாவார்கள். அதனால், முக்திப்பேறு கிடைக்கும் பொருட்டு மதாசாரியர்களால் தாபிக்கப் பெற்ற அந்தந்த மதங்களும் மேனிலைக்கு வருதலன்றியும் உலகமுள் ளளவும் பெருக்கமடைந்து நிலைபெறுதலாகும். அங்ஙனமின்றி ஆஸ் திக மதத்திற் றோன்றிய மாதர்களே தமது மததருமங்களை அனுட் டிப்பதில் அலக்ஷியஞ் செய்துவருவரேல் அவை குறைந்து வருத லன்றியும் நாளடைவில் பெயரளவிலும் இல்லாமற்போகும்.

நமது வீரசைவ மதமோ வேதாகம சம்மதமாக ஸ்ரீரேணுகாதி மகாசாரியர்களால் தாபிக்கப்பெற்றது. மிகப் பழமையானது. பெண் களுக்கும் சமவுரிமைத் தந்து நிலவுவது. நிம்மவ்வை, நீலாம்பிகை முதலிய பெண்மணிகளால் போற்றப் பெற்றது. அங்ஙனமிருந்தும் இக்காலத்திய நமது வீரசைவப் பெண்களோ பரம பவித்திரமான வீரசைவமத தருமாசரணைகளை வரவரக் குறைவுபட விடுத்துத் தமது மதவுண்மையையும், தமது கடமையையும் உணராது மக்களைப்பெற்று வளர்க்கும் மடமையந்திரமாக இருத்தலின், அவர்களுடைய கருப்

பத்திற் றோன்றும் வீரசைவ இளைஞர்களும் மததரும சூனியர்களாகி தோன்றியவாறு உலவிவருகின்றார்கள். வீரசைவ மதத்திற் றோன்றிய எத்துணையோ பெண்கள் தீக்ஷா சமஸ்காரம் அற்றவராகியும், ஆசாரக் குறைவுள்ளவராகியும், குருபக்தி யற்றவராகியும், இலிங்க நிஷ்டா சூனியராகியும், தருமாதரும ஞானமற்றவராகியுங், அனைத்திற்கும் அடிப்படையான கல்விப் பயிற்சி யில்லாதவராகியும், எவ்வகையிலும் பிற்போக்கான நிலைமையில் இருத்தலினால் அவர்களது கருப்பத்திற் றோன்றிய வீரசைவ இளைஞர்களும் அவர்களுடைய கூட்டுறவினால் யாதொரு நற்பழக்கமும் மததருமாசரணையும் இல்லாதவராகிப் பெயரளவில் வீரசைவரெனக் கூறிக்கொண்டு மதத்தின் பெருமைக்கும், மதத்தாபனாசாரியர்களுடைய கருத்திற்கும் பெருங் குறைவை உண்டாக்குகின்றனர். அநேக இடங்களில் வீரசைவ மகளிர் பலர் குருலிங்க பூஜாதிகாரத்தைக் கொடுக்க வல்ல ஆண் பெண்பாலர் இருவருக்குமுரிய சாமானிய சிவதீக்ஷையும் பெறாமல் பிறந்தபடியே சமஸ்காரம் அற்றவராயிருக்கின்றனர். இந்தச் சமஸ்காரமற்ற மகளிர் சிவலிங்கத்தைத் தொடுதற்கும், பூசிப்பதற்கும் அதிகாரிகளாகார். சில பெண்கள் தீக்ஷையில்லாமலேயே பிறந்தபொழுதே தரிக்கப்பெற்ற சிவலிங்கத்திற்கு யாதொரு முறையுமறியாது உலகத்தாருக்காகப் பூசை செய்துவரக் காண்கிறோம்; அந்தோ அதனால் யாதொரு பயனுமில்லையே! நாம் பிறந்தபொழுது தரித்துள்ள சிவலிங்கம் கேவல சயனாவஸ்தையிலன்றோ இருக்கின்றது. சயனாவஸ்தையில் இருப்பவர் பிறர் செய்யும் உபகாரங்களை ஏற்றுக்கொண்டு வேண்டிய தொன்றனை எங்ஙனந் தருவர்? சயனாவஸ்தையிலிருக்கும் சிவலிங்கப் பெருமான் அபிமுக (நேர்முக) மாகநின்று, தாம் செய்யும் பூசையை ஏற்றுக்கொண்டு, பயனளிக்க வேண்டுமானால் நமது வீரசைவ மகளிர்களும் உரியகாலத்தே தமது கோத்திர குருவினால் மத சமஸ்காரமெனப் பெறும் தீக்ஷையைப் பெற்று, பரிசுத்தராகிச், சிவலிங்க நிஷ்டா தருமத்தின் நுட்பத்தை அறிந்துகொள்ளுதல் வேண்டும். இயலாதாயின் விவாகத்தைத் தொடங்கும் முதல் நாளிலாயினும் தீக்ஷையைப் பெறுதல் வேண்டும். சிலர் விவாகஞ்செய்த பின்னர் இருவர்க்கும் மணமகனுக்குரிய கோத்திர குருவினால் செய்யப் போவதாகக் கூறிவிடுகின்றனர். ஓர் தந்தை தான் பெற்ற பெண்ணிற்குக் கற்பு முதலிய அருங்குணங்களைக் கற்பிப்பதுடன் வீரசைவ

சமயப்பிரகாரம் இஷ்டலிங்கத்தைப் பூசித்தற்குரிய தீக்ஷை முதலிய வற்றையுஞ் செய்வித்துச் சமய ஒழுக்கங்களைக் கற்பித்தற்கும் உரியவ னுகின்றுன். சமய ஒழுக்கங்கள் கற்பிக்கப்படாத கன்னிகையை மண மகனைத் தேடிக்கொடுக்கும் கன்னிகாதானமும் நற்பலனைத் தராது. எனெனில், தீக்ஷையில்லாத கன்னிகையை மணமகளாக வரித்து, மண மேடையில் தன் பக்கத்தில் அமர்த்தி, ஒற்றுமையுடன் நியாசபூர்வக மாகச் செய்யப்பெறும் ஸ்ரீபஞ்சாசாரிய பூசையும், அவர்களருளாற் பெறும் இல்லற தருமமும் அம்மணமகனுக்கு எங்ஙனம் நற்பலனைத் தரும்? மணமகன் தீக்ஷை பெற்றவனுயிருந்தும் மணமகள் தீக்ஷை யில்லாதவளாயின் அவர்களது மணமும் இல்வாழ்க்கையும் பயனற் றனவாகுமென்றால் மணமக்கள் இருவரும் தீக்ஷையில்லாதவராயின் அவர்களது இல்லறம் எந்தநிலையில் நிற்குமென்பதை அறிஞர்களே! நீங்கள் யோசியுங்கள்! இந்தத் திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதரும் சமாஜத்தாரும் தம்பதிகளைப் பதிதராக்குதலையன்றித் தாமும் பதிதராவார் என்பதில் ஐயமின்று. இத்தகைய மணமற்ற மணஞ்செய்வதிலும் யாதொரு கிரியையுமின்றி உண்டுடுத்தி விலங் கினம்போல் கூட்டுறவிற் புகவிடுவது நலமல்லவா? ஆசாரியர்களும் மடாதிபதிகளும் இக்குறைகட்கு இடங்கொடுத்து நிற்பரேல் பக்தா தியரிடத்தில் குறை கூறுவதனல் யாது பயன்? அன்னார்க்கு அறு முக வள்ளலே அறிவு கொளுத்தி அருள்புரிவாராக! அன்றியும் தீக்ஷையில்லாத மகளிர் செய்த பாகமும் சிவலிங்கத்திற்கு அர்ப்பித மாகாது. தீக்ஷை பெற்றவரும் தீக்ஷையில்லாத பெண்டிரால் செய்யப் பட்ட உணவினை உண்ணலாகாதென்றும், ஒருவேளை இலிங்கத்திற்கு அர்ப்பணஞ்செய்து உண்பரேல் அதனல் கோரமான பாபமே உண் டாவதென அற நூல் கூறுமேல் அவரது முயக்கம் எத்துணைக் கேட்டை விளைக்குமோ அறியேம்.

அன்றியும் சில விடங்களில் "சர்வஸ்மின் நபிகர்மணி ஸ்நாந ஸ்யைவ ப்ராதமிதத்வாத்" என்பதனல் பிரதம கருமமெனப்படும் ஸ்நான விதியையே பெண்கள் அனுசரிப்பதில்லை இங்ஙனம் நீரா டாமலே அசுத்தமுடையவளாகிப் பாகஞ் செய்வாளேயாயின் அந்த அசுத்த பாகத்தை தூய்மையரான இலிங்காங்கிகள் தமது இஷ்ட லிங்கத்திற்கு அர்ப்பிப்பது எனே? அர்ப்பண விதியை மீறுவதனல்

இஷ்டலிங்கப் பெருமான் தோஷமுடையவனுதற்குப் பதிலாக அர்ப்பித்தவ ரிடத்திலேயே கோபமுடைய ராகாரோ? இப்படிப்பட்ட தீக்ஷை யில்லாதவரும் தருமசூனியருமாகிய மகளிரது கருப்பத்தினின்றும் பிறக்கும் சந்ததியார்களோ தீக்ஷா சமஸ்காரத்திற்கு அருகராகப் போகின்ருர்கள்? இப்படிப்பட்டவரிடத்தில் கிரியா நிஷ்டையாயினும் எப்படிப் பிறக்கும்? அந்தந்த மததருமங்கள் அந்தந்த மதத்தினருடைய கிருகத்தில் பரம்பரையாக நடைபெற வேண்டுமானல் அதற்கும் மகளிரே காரணமாகின்றனர். புருடர்கள் ஆசார சீலர்களாயிருப்பதனுல் மாத்திரம் குழந்தைகள் மேன்மை யடைந்து விடமாட்டார்கள். சிசுவை ஒன்பது மாதம்வரை தமது கருப்பையில் வைத்துத் தாமுண்ணும் அன்னரசத்தினுல் போஷிப்பதேயன்றிப் பெற்ற பின்னரும் தாய்மார்களே தமது லாலன பாலனதிகளால் வளர்ந்துவருவதனல் அன்னைமாரிடத்துள்ள பழக்கங்களே முயற்சியின்றிக் குழந்தைகட்கு நிறைந்துவிடுகின்றன. தர்மார்த்த காம மோக்ஷமென்னும் புருஷார்த்தங்களுக்கும் மகளிரே காரணமாகின்ருர்கள். "பால்யாமூலம் த்ரிவர்க்கஸ்ய பார்யாமூலம் தரிஷ்யத:" என்பதும் இதனையே கூறும்.

இங்ஙனம் கூறியவாற்ருல் நமது வீரசைவப் பெண்களாலேயே நமது மததருமம் நிலைபெற வேண்டியிருப்பதனுல், இலிங்காங்கினியாகிய ஒவ்வொரு மகளிரும் தமது மததருமத்தை நன்குணர்ந்து தீக்ஷாசமஸ்காரமுடையாராய் இல்லறத்தை நடத்துவதேயன்றித் தமது மக்களுக்கும் இளமை முதற்கொண்டே தம் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஆரம்பக்கல்வியை இலகுவில் கற்றுக்கொடுப்பதுடன் தமது நடையுடை பாவனையினுலேயே வீரசைவ சமயாசாரங்களைப் பழகிவரும்படித் தாமே நடந்து காட்டவேண்டியது தமது முதற்கடமை என்பதை நன்குணர்வாராக. இம்மகளிர்க்கு மங்கை பங்காளராகிய சதாசிவமூர்த்தி இன்னருள் புரிவாராக.

திருமுருகாற்றுப்படை.

(க. திருப்பரங்குன்றம்).

(முன் தொடர்ச்சி).

எ. கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்டார் புரளு மார்பினன்.

(ப—ரை.) கார்கோள் — கடலின்கண், முகந்த — முகந்ததனாலுண்டாகிய, கமம் — நிறைவினையுடைத்தாகிய, சூல் — கருப்பத்தினையுடைய, மாமழை — பெருமையையுடைய மேகம், வாள் — திங்களும் ஞாயிறும், போழ் — (இருளை) நீக்கும், விசும்பில் — ஆகாயத்தின்கண்ணே, வள் உறை — பெருமையுடைய துளியை, சிதறி — முற்படச் சிதறி, தலைப் பெயல் — கார்காலத்து முதற்பெயலை, தலைஇய — சொரிந்த, தண் நறும் கானத்து — குளிர்ச்சியும் மணமும் பொருந்திய காட்டின்கண், இருள் பட — இருட்சியுண்டாக, பொதுளிய — தழைத்த, பராரை — பருத்த அடியினையுடைய, மராஅத்து — செங்கடம்பினது, உருள்பூ — தேருருள்போலும் பூவாற் செய்யப்பட்ட, தண்தார் புரளும் — குளிர்ந்த மாலையசையும், மார்பினன் — மார்பினையுடையவன்.

(பொ—ரை). கடலின்கண் முகந்ததனாலுண்டாகிய நிறைவினையுடைத்தாகிய கருப்பத்தினை யுடைய பெருமையை யுடைய மேகம், திங்களும் ஞாயிறும் இருளை நீக்கும் ஆகாயத்தின்கண்ணே பெருமையையுடைய துளியை முற்படச் சிதறிக் கார்காலத்து முதற்பெயலைச் சொரிந்த குளிர்ச்சியும் மணமும் பொருந்திய காட்டின்கண் இருட்சியுண்டாகத் தழைத்த பருத்த அடியினையுடைய செங்கடம்பினது தேருருள்போலும் பூவாற்செய்யப்பட்ட குளிர்ந்த மாலையசையும் மார்பினை யுடையவன் என்க.

(வி—ரை). காரால் முகக்கப்படுதலின் கடல் கார்கோளென்று பெயர் பெற்றது; இது தொழில் ஆகுபெயர். வாள் — ஒளி; அஃது

அதனையுடைய திங்கள் ஞாயிறுகட்குக் குணவாகு பெயராயிற்று. பராரை — பண்புத்தொகைச் சந்திமுடிபு வேற்றுமை யென்றுணர்க. உருள்பூ உவமத் தொகையாகலின், உருள்பூ உருட்பூவென உறழ்ச்சி முடிபெய்தும். இனி உருளும்பூ உருண்டபூவென வினைத்தொகை யுமாம். மழை சிதறித் தலைப்பெயல் தலைஇய கானத்து மராஅத் துத்தார் புரளும் மார்பினனென முடிக்க.

இச்செங்கடம்பின்தார் போகத்திற் குரியதாகலின் இதனை முற் கூறினர்; சத்தியுஞ் சிவமுமாய்நின்று ஆன்மாக்களுக்குப் போகத்தை யூட்டுவிக்கும் முருகன் என்னும் பொருள்தரும் வாணுதல் கணவ னென்றதனை நோக்கி, இதனால் இறைவன் உருவங்கடந்த முழுமுத லாயினும் சத்தியும் சிவமுமாகிய உருவம்பெற்று மாலை முதலியன அணிந்துகொள்வதும் ஆன்மாக்களுக்குப் போகத்தை ஊட்டுவித்து அதன் முடிவின்கண் தன்மயமாக்குவிப்பன் என்பது பெற்றும்.

மால்வரை என்பதுமுதல் சென்னியன் (சச) என்னுந் துணையும் ஒரு தொடர்.

கஉ. மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கரு. கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
ககூ. சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனி
சக. சூரர மகளிர்.

(ப—ரை). மால்வரை — பெருமையையுடைய மூங்கில், நிவந்த — வளர்ந்த, சேண்உயர் வெற்பில் — தேவருலகளவாகச் செல்லவுயர்ந்த மலையில், கிண்கிணி—சிறுசதங்கை, கவைஇய — சூழ்ந்த, ஒண்செம்சீறடி — ஒள்ளிதாகிய சிவந்த சிறிய அடியினையும், கணைக்கால் — திரண்ட காலினையும், பணைத்தோள்—பெருமையையுடைய தோளினையும், கோபத்து அன்ன — இந்திரகோபத்தை ஒத்த, தோயாப்பூந்துகில் — நிறம்பிடி யாத இயல்பான சிவப்பாகிய பூத்தொழிலினையுடைய துகிலினையும்,

பல்காசு நிரைத்த – பலமணிகள் கோத்த, சில்காழ் அல்குல் – ஏழுவட மாகிய மேகலையணிந்த அல்குலினையும், கைபுனைந்து இயற்று – ஒருவர் கையிற் சிறப்பித்துப் பிறப்பியாத, கவின்பெறு – அழகைத் தமக் கியல்பாகப் பெறுகின்ற, வனப்பின் – இயற்கை யழகினையும், நாவலொடு பெயரிய – சாம்பூநதம் என்னும் பெயர்பெற்ற, பொலம்புனை – பொன்னால் நிருமித்து, அவிர் இழை – விளங்குகின்ற பூணினையும், சேண் இகந்து விளங்கும் – சேய் நிலத்தைக் கடந்து விளங்குகின்ற, செயிர்தீர் – குற்றந் தீர்ந்த, மேனி – நிறத்தினையும் உடைய (சூரர மகளிர்) என்க.

(போ–ரை). பெருமையையுடைய மூங்கில் வளர்ந்த தேவருலகளவாகச் செல்லவுயர்ந்த மலையில், சிறுசதங்கை சூழ்ந்த ஒள்ளிதாகிய சிவந்த சிறிய அடியினையும், திரண்ட காலினையும், பெருமையையுடைய தோளினையும், இந்திரகோபத்தை யொத்த நிறம்பிடியாத இயல்பான சிவப்பாகிய பூத்தொழிலினை யுடைய துகிலினையும், பல மணிகள் கோத்த ஏழுவடமாகிய மேகலையையணிந்த அல்குலினையும், ஒருவர் கையிற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கியல்பாகப் பெறுகின்ற இயற்கையழகினையும், சாம்பூநதமென்னும் பெயர்பெற்ற பொன்னால் நிருமித்து விளங்குகின்ற பூணினையும், சேய்நிலத்தைக் கடந்து விளங்குகின்ற குற்றந்தீர்ந்த நிறத்தினையுமுடைய சூரரமகளிர் என்க.

(வி–ரை). வரைகளை யுடைமையின் 'வரை' என்பது மூங்கிற்கு ஆகுபெய ராயிற்று. இனித் திருமால் போலுங் குவடுக ளுபர்ந்த வெற்பென்னுமாம் – தெய்வத்தின் ஆணையால் தானே சிவந்திருத்தலின் தோயாத் துகிலென்றார். சில்காழ் – சிலவடம், இஃது தொகையிற் குறைந்த ஏழு வடமாகிய மேகலைக்காயிற்று. இதனை "எண் கோவை காஞ்சி யெழுகோவை மேகலை – பண்கொள் கலாபம் பதினாறு – கண்கொள் – பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு – விரிசிகை யென்றுணரற் பாற்று" என்பதனானுணர்க. மானிட மகளிர்க்குத் தோழியர் பலரும் கையிற்செய்து பிறப்பிக்கும் செயற்கை யழகுபோலாது தெய்வத் தன்மையால் இயல்பாகப் பெற்ற அழகினை யுடையவர் சூரர மகளிராதலின், கைபுனைந் தியற்றா வனப்பின் சூரர மகளிர் என்றார். பொலம் - பொன்; "பொன்னென் கிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகாரம் மகாரம், செய்யுண் மருங்கிற்றொடரியலான" என்பது சூத்திரம் தொல்-சொல்-புள்ளி மயங்கியல் சூக.

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

2. திருவையாறு தருமாம்பாள் திருவருட் சங்கம் மூன்றாவதாண்டு நிறைவுவிழா.

திருவருட் செயலால் 3—5—1930 முதல் 11—5—1930 வரை ஒன்பது நாட்களினும் திருவையாற்று அறுபத்துமூவர் மடாலயத்தைச் சார்ந்த பூசைப் படித்துறையின்கண் பல தகுதியுடையார் தலைமை வகிக்க, அறிஞர் பலர் பல்பெருஞ் சொற்பொழிவாற்ற, ஷை சங்கத்தின் மூன்றாவதாண்டின் நிறைவுவிழா செவ்வனே நடைபெற்றதாகத் தெரியவரப் பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றோம். இச்சங்கத்தை நடத்திவருவோர், சோழநாட்டின்கண் புதகரையென்னும் சிற்றூரின்கண் தோன்றி, மதுரை முதலிய நகரங்களில் இலக்கண இலக்கிய தத்துவ நூற்பயிற்சியையும் முறையே பயின்று, துறவற நிலையை அடைந்து, துறையூர் வீரசைவ மடாதிபதி ஸ்ரீமத் சுவாமிகளால் சிவலிங்கதாரண தீக்ஷையும்பெற்று, ஸ்ரீவிருத்தாசலம் குமாரதேவர் ஆலய பரிபாலனஞ்செய்து, நிகழ்ச்சியில் திருவையாறு அறுபத்து மூவர் மடாலயத்தின் அதிபராக விளங்கும் ஸ்ரீமத் சிதம்பரசுவாமிகள் என்னும் பெரியாராவர். இவர்கள் சொற்பொழி வாற்றும் வன்மையும், காலநிலைக்கேற்ப உலகத்திற்கு உதவிபுரியும் வள்ளன்மையும் உடையவர்களாதலின் இச்சங்கம் நீடூழி நின்று நிலவுமென எண்ணுகின்றோம்.

---

3. மேலைச்சிவபுரி சன்மார்க்க சங்கத்தின் 21-ஆம் ஆண்டு நிறைவுவிழா.

திருவருட்டுணையால் இச்சங்கத்தின் 21-வது ஆண்டு நிறைவு விழா 13, 14—6—1930 இவ்விரு நாட்களிலும் திருவனந்தபுரம் ரிடையர்டு ஹை கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் K. G. சேஷையரவர்கள், B. A. B. L., M. R. A. S. தலைமை வகிக்க, திருவாரூர் போர்டு ஹை ஸ்கூல் பண்டித. திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள் 'கம்பரும்

சேக்கிழாரும்' என்பது பற்றியும், தேவகோட்டை சிவாகம சங்கம வித்துவான் திரு. பொ. முத்தையா பிள்ளையவர்கள் 'ஆலய வழிபாடு' என்பது பற்றியும், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் B. A. B. L. 'பிறர்நலம்' என்பது பற்றியும், மகிபாலன்பட்டி பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 'ஆளுடைய அடிகள் அருண்மொழி' என்பது பற்றியும், தஞ்சை ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B. A.. L. T. 'சைவ நாகரீகம்' என்பது பற்றியும், ஜலகண்டபுரம் தமிழ்ப் புலவர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் 'நமக்கினியார்' என்பது பற்றியும், முசிரி 'வீரசைவம்' இதழாசிரியர் திரு. வீ. குமாரவீரையரவர்கள் 'நூல்நயம்' என்பது பற்றியும், பிறபுலவரும் அரிய பொருள்பற்றியும் சொற்பொழிவாற்ற இனிது நடைபெற்றது. முடிவில் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் விருந்தினராக வந்திருந்த புலவர்கள் முதலியோர் பேருவகை கொள்ளுமாறு உரையமுதளிக்க, சங்கத் தலைவர் திரு. வ. பழ. சா. சாமிநாதஞ் செட்டியாரவர்கள் மாலைசூட்டி மகிழ்விக்கப் புலமை மணங்கமழ இச்சங்கம் நடைபெற்று வருகின்றமை பாராட்டற்பாலதே! நீடூழி நின்று நிலவுக!

முசிரி தாலூகா, செல்லிபாளையம்

4. ஸ்ரீவாணி சமரச நன்னிலைச் சங்கத்து முதலாவது ஆண்டுவிழா.

இறைவன் திருவருளால், இச்சங்கத்து முதலாவதாண்டுவிழா **22—6—1930**, ஞாயிற்றுக்கிழமையன்று முசிரி உயர்தரக் கல்விச் சாலைத் தலைமைத் தமிழாசிரியரும், 'வீரசைவம்' இதழாசிரியருமான உயர்திரு. வீ. குமாரவீரையர் அவர்கள் தலைமை வகிக்க, துறைசை திரு. பாலசுந்தரய்யர் அவர்கள் தேவாரத் திருமுறையோத, ஷியூர் சின்னமடம் திரு. பெருமாளையா அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்க, சிறுகனூர் திரு. அரங்கசாமி பாகவதர் அவர்கள் 'உபயவிபூதி தத்துவம்' என்பது பற்றியும், எத்தாப்பூர் சீவகாருணிய சங்கத் தலைவர் திரு. Y. S. அருணாசல அய்யர் அவர்கள்

'ஜீவகாருண்யம்' என்பது பற்றியும், வைரிசெட்டிப்பாளையம் கலாசாலை ஆசிரியர் திரு. நம்பெருமாள் ரெட்டியாரவர்கள் 'இராமனும் குகனும்' என்பது பற்றியும், செவந்தாம்பட்டி திரு. பெ. இராமாநுஜ ரெட்டியாரவர்கள் 'பழந்தமிழ்ப் புலவர்' என்பது பற்றியும், துறையூர் வழக்கறிஞர் திரு. M. R. இராஜகோபால் பிள்ளை அவர்கள் B. A., 'பெண்கள் உரிமை' என்பது பற்றியும், சொற்பொழிவாற்ற, தலைவரவர்கள் முன்னுரையாகச் சங்கத்தின் பெயர் காரணத்தையும், அதன் பயனையும் விளக்கியதுடன் முடிவுவரையில் சொற்பொழிவாளர்களது கருத்துக்களின் நயங்களை யாவருக்கும் விளங்க எடுத்துரைத்து, சீவகாருணியமே அறங்கள் அனைத்திற்கும் அடிப்படையென்றும், அவிசொரிந்து ஆயிரம் வேள்வியியற்றலினும் ஒருயிரின் உயிர்வதை செய்துண்ணாமை பேரறமாதலின் கிராமங்களில் அறியாமையால் சிறுதெய்வங்கட் கிட்டுவரும் பலி முதலிய தீச்செயல்களை ஒழித்தற்கு நகரத் தலைவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுதல் நலமாமெனவும், எல்லாவற்றிற்கும் கல்விப் பயிற்சியே காரணமென்றும் விளக்கி மகிழ்வித்தார்கள். உள்ளூர் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் திரு. பொன்னுசாமி ஐயரவர்களுடைய புதல்வியாகிய 10 வயதுள்ள பெண் கடவுள் வாழ்த்தாக அரிய பாக்களை யோதிப்பேசி மகிழ்வித்தமை பாராட்டற்பாலது. தலைவர் திரு. சி. சதாசிவ ரெட்டியாரவர்களும், காரியதரிசி திரு. சி. ந. அருணசல ரெட்டியாரவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியால் முதலாவதாண்டுவிழா குறைவின்றி நடைபெற்றது. இச்சங்கம் நீடூழி நின்று நிலவி நற்பய னளிப்பதாகுக.

---

1. புதுப்பேட்டை ஸ்ரீபசவ ஜயந்தி மகோற்சவம்.

வட ஆர்க்காடு சில்லா, திருப்பத்தூர் தாலூகா, புதுப்பேட்டையின்கண் வீரசைவ மகாஜனங்களால், 1—5—1930 வியாழக்கிழமையன்று காலையில் தோரணாதிகளால் அலங்கரிக்கப்பெற்ற ஸ்ரீ பசவேசுவரர் ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தி, அழகியதோர் விமானத்தின்கண் புஷ்பாலங்கிருத சோபிதமான ஸ்ரீபசவேசுவரப் பெருமானது திருவுருவப் படத்தை எழுந்தருளச் செய்து, பக்தகோடிகள் நிவேதனம் புரிந்து வணங்க நகர்வலஞ் செய்வித்து,

ஆடம்பரத்துடன் தேவஸ்தானத்தின்கண் சேர்க்கைசெய்விக்க ஜயந்தி மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. மாலையில் ஸ்ரீமான் D. S. A. பசவப்ப செட்டியாரவர்கள் தலைமைவகிக்க ஸ்ரீமான் S.A.ருத்திரப்பா அவர்கள் ஸ்ரீபசவேசுவரசுவாமி அவதார மகிமையையும், பசவேசர் வீரசைவ சமயத்தைப் புனருத்தாரணஞ் செய்வித்த சிறப்பையும் உபந்நியாசம்புரிந்து யாவருக்கும் பக்தியை யுண்டாக்கினார்கள். மறு நாட் காலையிலும் அபிஷேக ஆராதனைகள் நடத்தி சுமார் 200 ஏழை ஜனங்கட்கு அன்னமளிக்க S. A. ருத்திரப்பா அவர்களால் கன்னட பாஷையிலுள்ள ஸ்ரீ பசவராஜ விஜயமென்னும் புராணப் பிரசங்கம் நடைபெற ஸ்ரீபசவேசர் அருட்பிரசாத வினியோகத்துடன் ஸ்ரீபசவேசுவர ஜயந்தி மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. புதுப் பேட்டை வீரசைவ மகாஜனங்களின் குருபக்தி பாராட்டற்பாலது.

சுபம்!

இங்ஙனம்

அன்பன், **S. A,** ருத்திரப்பா.

வடநாட்டு நிகழ்ச்சிகள்.

பெங்களூர் ஸ்ரீபசவ ஜயந்தி மகோற்சவம்.

1–5–1930 காலையில் பெங்களூரின்கண் வீதிகள்தோறும் நிரம்பிய வீரசைவர் மனைகளிலெல்லாம் புதுமையான அலங்காரக் காட்சிகள் காணப்பெற்றன. ஆண் பெண் பாலர்கள் ஆசார சீலர்களாய்ப் பொலிந்து விளங்கினார்கள். மடங்கள் தோறும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஆங்காங்கு அன்புடன் அழைத்துப் பிரசாதம் வழங்கினர். சிலர் ஸ்ரீபசவேசரது மகிமாகீதங்கள் அச்சிட்ட துண்டுப் பத்திரிகைகளைப் பரப்பினர். மாலை 6 மணிக்கு மல்லிகை முதலிய அரும்புகளால் சித்திர வேலைப்பாடமையக் கண்கவர் வனப்பினதாய் அலங்கரிக்கப் பெற்ற விமானத்தின்மீது வெள்ளியினால் புதிதாகச் செய்யப்பெற்ற ஸ்ரீபசவேசரது திருவுருவப்படத்தை எழுந்தருளச்செய்து பலவாத்திய கோஷத்துடன் சீமான்களாகிய பிரபல வீரசைவப் பெரியார்கள் பெருமகிழ்ச்சியுடன் சூழ்ந்துவர மடாலயத்தி

னின்றும் புறப்பட்டு நகர் முழுவதும் உலாப்போந்து காலை 5 மணிக்குச் சேர்க்கை செய்வித்தார்கள். அன்று முழுதும் அங்கு பசவேசருடைய பக்திசம்பந்தமான உரைகள் நடந்தனவேயன்றி வெற்றுரைகள் ஒன்றேனுங் கேட்கப்பட்டில; எனவே வடநாட்டின் வீரசைவப் பிரசாரம் எவ்வளவு பாராட்டத் தக்கதாகின்றது! (ப-ர்.)

மைசூர் ஹை கோர்ட் ஜட்ஜ்

ஸ்ரீமான் P. மகாதேவய்யா. B A., B. L. அவர்கள்

வீரசைவர்களில் இதுவரை எங்கும் யாரும்பெறாத 'ஹைகோர்ட் ஜட்ஜ்' பதவி மேற்கண்ட மகாதேவய்யா அவர்களுக்கு இப்பொழுது கிடைத்திருப்பதைப்பற்றி பரதக் கண்டத்திலுள்ள வீரசைவரனைவரும் பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள். இப்பதவியைப் பெறுதற்கு இவர்கள்பால் அமைந்துள்ள திறமையும் நற்குணங்களுமே காரணமாகும். இவர்கட்கும் இவர்க்கு இப்பதவியை அளித்த மைசூர் ஸ்ரீமந் மகாராஜா அவர்கட்கும் வீரசைவ சமூகத்தார் வாழ்த்துரை கூறி நன்றி பாராட்டுகின்றார்கள்.

அட்டாவரணம்.

ரு-வது இலிங்கம்.

வேதாகமப் பிரமாணங்களை மேற்கொண்டு தலைசிறந்து விளங்கும் வீரசைவ சித்தாந்தப்படி விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கரம், குரு, இலிங்கம், சங்கமம், தீர்த்தம், பிர்சாதம் என்னும் எண்பொருள்களும் அட்டாவரணம் எனப்பெறும். அவற்றுள் முதல்நான்கும் முன் இதழ்களில் விளக்கப் பெற்றன.. ரு-வது இலிங்கவிலக்கணம் இதன்கண் விளக்கப் பெறுகின்றது.

வாக்கான் இத்தன்மைத்தென மொழிதற்கும் மனத்தான் 'இத்தன்மைத்தென நினைத்தற்கும் எட்டாமையான் மொழிமனங்கடந்து,

ஞானவொளியுருவாக விளங்கும் மெய்ப்பொருளாகிய பிரமமே சராசர வடிவாகக் காணப்பெறும் உலகம் தன்கண் தோன்றி மீளவும் ஒடுங்குகின்ற காரணத்தால் 'இலிங்கம்' என்னும் பெயர் பெற்றதென்றும், சச்சிதானந்த வடிவாக விளங்கும் அவ்விலிங்கமே எல்லாவற்றிற்கும் பெரிதாந் தன்மையுடையதாதலானும் தோன்றுகின்ற உலகத்திற்குக் கருப்ப (பிறப்பக)மாக நிற்குந் தொடர்பினானும் 'பிரமம்' என்னும் பெயர் பெற்றதென்றும் வேதாகமங்கள் கூறுகின்றன. ஆதலின் பிரமம், இலிங்கம் என்னும் சொற்களின் பொருள் ஒன்றேயன்றி வேறின்று.

உரைமனங்கடந்த ஒளியுருவாகவும், சச்சிதானந்த வடிவாகவும், எல்லாவற்றிற்கும் பெரிதாகவும், உலகத்தின் தோற்ற வொடுக்கங்கட்கு இடமாகவும் நிற்கும் பரப்பிரமமாகிய பரசிவலிங்கமே இட்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம் என மூவகைப்படும். அவற்றுள் இஷ்டலிங்கம் தூலதேகத்தின்கண் கன்மமல நீக்கத்தின் பொருட்டுத் தரிக்கப் பெறுவது. பிராணலிங்கம், சூக்கும தேகத்தின்கண் மாயாமல நீக்கத்தின் பொருட்டுத் தரிக்கப் பெறுவது. பாவலிங்கம் காரண சரீரத்தின்கண் ஆணவமல நீக்கத்தின் பொருட்டுத் தரிக்கப் பெறுவது.

இட்டலிங்கமே ஆசாரலிங்கம் குருலிங்கமெனவும், பிராணலிங்கமே சிவலிங்கம் சங்கமலிங்கமெனவும், பாவலிங்கமே பிரசாதலிங்கம் மகாலிங்கமெனவும் மூவகை இலிங்கங்களும் இவ்விரண்டாகப் பிரிந்து அறுவகை இலிங்கங்களாகும்.

அட்டாவரணங்களுள் ஐந்தாவதாகிய இலிங்க வகையினையும், அவற்றை உபாசிக்கும் அங்க வகையினையும் உணர்த்து முன்னர் அவற்றையுள்ளிட்ட அட்ட சயிலத்தை விளக்கிச் செல்வது இன்றியமையாத தொன்றாகலின் அஃது ஈண்டு விளக்க வேண்டியதாயிற்று. அட்டசயிலமாவன:—அங்கம், இலிங்கம், பக்தி, சத்தி, கை, முகம், அர்ப்பிதம், சேடம் என்பன. இவை ஒவ்வொன்றும் அறுவகைப்படும். அங்கத்தலம் ஆறுவன:—பக்தன், மாகேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கியன் என்பன. இலிங்கத்தலம் ஆறுவன:—

ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாதலிங்கம், மகாலிங்கம் என்பன. அறுவகை பக்தியாவன:—சற்பக்தி, நைட்டிகபக்தி, அவதானபக்தி, அநுபவபக்தி, ஆனந்தபக்தி, சமரச பக்தி என்பன. அறுவகைச் சத்தியாவன—கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி, பராசத்தி, சிற்சத்தி என்பன. கை ஆறுவன:—சுசித்தம், சுபுத்தி, நிராங்காரம், சுமனம், சுஞ்ஞானம், சற்பாவம் என்பன. முகம் ஆறுவன:—நாசி, நா, கண், மெய், செவி, உள்ளம் என்பன. அர்ப்பிதம் ஆறுவன:—கந்தம், சுவை, ஔி, ஊறு, ஓசை, திருப்தி என்பன. அறுவகை சேடமாவன:—கந்த முதலிய ஆறுற்றோன்றும் அறுவகை யின்பங்களுமாம்.

அட்டசயில மெனப்பெறும் அங்கமுதலிய எண்பொருளும் பரசிவத்தின் சொரூபமாகிய சத்து, சித்து, ஆனந்தமென்னும் மூன்றினின்றும் தோன்றினவாம். அவை தோன்றுமாறு:—சத்தே அங்கத் தலமாகவும், இலிங்கத் தலமாகவும் தோன்றிற்று. சித்தே சத்தியாகவும் பக்தியாகவும் தோன்றிற்று. ஆனந்தமே கை, முகம், அர்ப்பிதம், சேடம் என்னும் நான்காயிற்று. இதற்குப் பிரமாணம்:—

"சத்தங்க லிங்கங்க ளாயே நிகழ்ந்தது சத்திபக்தி
சித்தங் கடைந்தது கைமுக வர்ப்பித சேடங்களாய்
மெத்தேன் றியங்குநின் ஞனந்த மேயேன் விழிகளிப்பக்
கைத்தங்கு செம்பொரு ளேயருள் காட்டுங் கறைக்கண்டனே."

—(நிரஞ்சனமாலை).

"அங்கலிங்க சத்திபத்தி யத்தமுக வர்ப்பிதசே
டங்களிவை யட்ட சயிலமேனச் சொன்னனே".

(சிவஞானசுவாமிகள் தாலாட்டு).

க. ஆசாரலிங்கம்:—பல பிறவிகளிற் செய்த சிவ புண்ணிய விசேடத்தால் மனைவி மக்கள் முதலிய தொடர்புடையா ரிடத்தும் பொன், மண் முதலிய பொருள்களிடத்தும் அவாவி மயங்கும் மயக்கந் தீர்த்து, சற்பக்தி பதிந்து நிற்கும் பக்தனது சுசித்தமாகிய கையிற் கண், கிரியாசத்தியுட னமர்ந்து நாசியின் முகமாகவரும் கந்தமாகிய அர்ப்பிதத்தை யேற்று அதனாலாய இன்ப சேடத்தை யருள்வது.

உ. குருலிங்கம் :—பழிக்கிடமான பிறர் பொருள் பிறர் மனைவி முதலியவற்றிற் செல்லும் வேட்கையினையும், பிறதெய்வ உபாசனையையும் அறவே விடுத்து, சிவன்ருளைக் கொடுக்கும் அட்டாவரணங்களையும் உவந்து ஏற்றுக்கொண்டு நைட்டிக பத்தியினால் விளக்கமுற்ற மாகேசனது சுபுத்தியாகிய கையிற்கண் ஞானசத்தியுடன் அமர்ந்து நாவின் முகமாகவரும் சுவையாகிய அர்ப்பணத்தை யேற்று அதனால் வரும் இன்பசேடத்தை யருள்வது.

ரு. சிவலிங்கம் :—விடய வாசனையிற் கட்டுண்டு யான் எனது என்னும் அகப்பற்றுப் புறப்பற்றுக்களை விடுத்து, தன்பாலடையும் புலன்களனைத்தையும் இறைவற்கே உரியனவெனச் சேர்ப்பித்து, அவதான பக்தியினால் விளக்கமுறும் பிரசாதியினது நிராங்காரமென்னுங் கையின்கண் இச்சா சத்தியுடன் அமர்ந்து, கண்முகமாக வரும் ஒளியாகிய அர்ப்பணத்தை யேற்று அதனாலாய இன்ப சேடத்தை அருளி நிற்பது.

சு. சங்கமலிங்கம் :—எப்பொழுதும் இயங்குந் தன்மையுடைய காற்றுடன்கூடி நிலைமைகெட்டு விடயங்களிற் சுழலும் கலக்கமனைத்தையும் அறவேவிடுத்து, உண்மை நெறியிற்சென்று அனுபவ பக்தியினால் விளக்கமுறும் பிராணலிங்கியினது சுமனமாகிய கையின்கண் ஆதிசத்தியுடனமர்ந்து, துவக்கு முகமாகவரும் தண்மை வெம்மை முதலிய ஊறாகிய அர்ப்பணத்தை யேற்று, அதனாலாய இன்ப சேடத்தை உதவிநிற்பது.

ரு. பிரசாதலிங்கம் :—உடம்பே சதியாகவும் தானே பதியாகவும்நின்று விஷயவாசனை யுண்டுழலும் மயக்கந்தீர்ந்து, சாந்தமடைந்த தானே சதியாகவும் பரசிவலிங்கமே பதியாகவும் நிற்கும் ஆண்டானடிமைத் திறத்தை யடைந்து ஆனந்த பக்தியினால் விளக்கமுறும் சரணனது சுஞ்ஞானமாகிய கையிற்கண் பராசத்தியுடன் அமர்ந்து, செவிமுகமாகவரும் கீதமுதலிய ஓசையாகிய அர்ப்பணத்தை யேற்று, அதனால்வரும் இன்பசேடத்தை யருள்செய்து நிற்பது.

சா மகாலிங்கம் :—யான் அடிமை சிவனே இறைவன் என்று நிற்கும் பேதபாவனையுமற்று, எங்குஞ் சிவமயமாகக் காண்கையினால்

சிவமே யான் எனக்கருதும் உயர்நிலையாகிய அபேத பாவனை கை வரப்பெற்று, சமரச பக்தியினால் விளக்கமுறும் ஐக்கியனது சற்பாவ மாகிய கையிற்கண் சிற்சத்தியுடன் அமர்ந்து, உள்ள முகமாக வரும் திருப்தியாகிய அர்ப்பணத்தை ஏற்று அதனாலாய பரமானந்த சேடத் தை யருள்செய்யா நிற்பது.

இங்ஙனம் வியாபித்து நிற்கும் இலிங்கத்தின் பெருமையினையும் உபாசித்து முத்திபெறும் நன்னெறியினையும் ஆசாரியர் மூலமாக தீக்ஷாசமஸ்காரம் பெற்று அறிந்துணர வேண்டுமாதலின் அவற்றை விடுத்து, வீரசைவர்களிற் பொதுவாக யாரும் அணிந்துகொள்ளும் இட்ட லிங்கத்தைப் பக்தியைப்பற்றி ஆராய்வாம். சிலர் நித்தி யாசார விரதங்களை அசதியினாற் கைவிடுத்து இஷ்டலிங்கதாரண மின்றிக் கேட்போருக்கு யான் பிராணலிங்க உபாசகனா யிருத்த லின் யானும் வீரசைவனெனக் கூறிக்கொள்ளத் தலைப்படுகின்றனர். அந்தோ இஃதறியாமை! எழுத்தாலாயது சொல். சொல்லா லுண ரப்படுவது பொருள். பொருள் இலக்கணம் சொல் இலக்கணங்களை யுணர்ந்த அறிஞனும் எழுத்திலக்கணத்தை விடமுடியாத வாறுபோல பிராண பாவலிங்கதாரியாகிய பக்குவமுடையாரும் அவற்றிற்காதார மான இட்டலிங்க தாரணத்தை விடுதற்குரியாரல்லர். இதனை,

“அத்தனை யகந்தரிக்க வசக்தனா யினும தாஅன்று
சத்தனே யெனினு ஞான தற்பர லிங்க மேயேன்
புத்தியின் றிட்ப மெய்தி புறத்தி லிங்கந் தரிக்க
வித்தக நெறியு ணர்ந்த வீரசை வர்கடா மன்றே.”

என்னும் சித்தாந்த சிகாமணிச் செய்யுளான் உணர்க. கண்ணிமை போற் காக்கும் ஆசாரியர் சிலாதிகளினாற் செய்யப்பெற்று இலக்க மமைந்த இலிங்கத்தை ஆனைந்து முதலியவற்றால் அபிடேசித்து, மந் திரத்தாற் சுத்திசெய்து, சிவகலையை ஆவாகனஞ்செய்து, பக்குவம் அடைந்த சீடனது உயிரை அச்சிவலிங்கத்தில் ஆக்ருஷணஞ்செய்து,

அவ்விலிங்கத்தைப் பிராணனில் தாபித்து, ஐக்கியபாவம் பெறச்செய்த இஷ்ட லிங்கத்தைச் சீடனது உடலின்கண் தரிப்பாராதலின் வீர சைவர் உயிர்விடுங்காறும் இட்டலிங்கத்தை இடைவிடாது தரித்து முறைப்படிப் பூசித்து நிவேதனப் பொருளையே உண்ணுதற்குரியர் என்னும் விரதத்தை மறந்தும் கைவிடார் என்பது துணிக.

(தொடரும்).

மகாசங்கத்தின் நன்கொடை வரவு.

அரும்பாவூர் திருவாளர் சிவப்பிரகாசய்யர் அவர்கள் தமது கிருகத்தில் 5—5—1930ல் நடப்பித்த தமது குமாரியின் திருமணத்தில் மகாசங்கத்திற்கு ஒதிவைத்தது ரூ. 2-0-0. கிருஷ்ணபுரம் திருவாளர் குமாரவீரய்யர் அவர்கள் தமது கிருகத்தில் 9—5—1930ல் நடப்பித்த தமது குமாரன் திருமணத்தில் மகாசங்கத்திற்கு ஒதிவைத்தது ரூ. 2-0-0. குகையூர் மேலமடம் திருவாளர் கந்தசாமி ஐயர் அவர்கள் தமது மடத்தில் 7—7—1930ல் நடப்பித்த தமது குமாரன் திருமணத்தில் மகாசங்கத்திற்கு ஒதிவைத்தது ரூ. 2-0-0. மண்பாறை திருவாளர் சிவப்பிரகாசய்யர் அவர்கள் தமது கிருகத்தில் நடப்பித்த தமது துவித குமாரியின் திருமணத்தில் மகாசங்கத்திற்கு ஒதிவைத்தது ரூ. 2-0-0. இத்தகைய திருமணங்களைப்பெற்ற மணமக்கள்கட்குப் புத்திரப்பேறு முதலிய எல்லாப்பேறும் உண்டாகுக என இச்சங்கத்தார் வாழ்த்துகின்றார்கள்!

பாலக்காடு தாலூகா முண்டூரிலிருக்கும் வீரசைவாபிமானி திருவாளர் சு. வெங்கடகிருஷ்ணக் குருக்கள் என்பார் வைகாசிமீ 23உ யில் தமது பௌத்திரன் திரு. வேணுகோபாலகிருஷ்ணனைப் பாடசாலையில் வைத்த நன்னாளில் மகாசங்கத்திற்கு ஒதியிட்டு மணியார்டர் மூலம் அனுப்பிவைத்தது ரூ. 1–0–0. இக்குழந்தை கல்விப்பயிற்சியினால் புகழ்பெற்று விளங்குக! எனச் சங்கத்தார் வாழ்த்துரை கூறுகின்றார்கள்.

"கலாநிதி" மதிப்புரை.

"கலாநிதி" என்னும் பெயரேற்றுவரும் செந்தமிழ்மாத வெளியீடு தேத்தாக்குடி திருவாளர் இராம. வயித்தியநாத சர்மா அவர்களால் அரிய கட்டுரைகளுடன் வெளியிடப்பெற்று, வீரசைவ சமயாபிமானமும் கமழுமாறு வெளிவருதலின் நேயர்கள் பெற்று மகிழ்வார்களாக.

விலாசம்— இராம வயித்தியநாத சர்மா,
தேத்தாக்குடி, வடக்குச்சேத்தி P. O.,
(*Via*) தோப்புத்துறை, S. I. R.


NELSON & CO.
MADRAS